குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பிலவங்க ஆண்டு சித்திரைத்திங்கள் 10—5—67 [இதழ்



ஸ்ரீ திருஞானசம்பந்தருக்கு நிவேதனம்செய்ய
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
பொற்குடத்தில் பால் அளித்தல்.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பிலவங்க - சித்திரை - 10—5—67 [இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

திருமணக் கோலப் பெருமான்

உலகில் மங்கலங்கள் எல்லாவற்றிலும் சிறந்த மங்கலம் திருமணம். மங்கலத்தை நிரம்ப உடைய பெருமான் சிவபெருமான். "குறைவிலா மங்கல குணத்தன் ஆதலின்........ அறைகுவர் சிவன்என அறிவின் மேலவர்" என்பது காஞ்சிப் புராணம். ஆயினும், சிலர் சிவநாமத்தைச் சொல்லவும், சிவமூர்த்தத்தை இல்லங்களில் வைத்து வழிபடவும் அஞ்சுகிறார்கள். அதற்குக் காரணம், சிவபெருமானது வடிவங்களில், நெற்றியிலும் மார்பிலும் திருநீறு, எலும்பு மாலை, கையில் கபாலம் முதலியவை காணப்படுதலாலும், 'சுடலையாடி' என்று சொல்லப்படுவதனாலுமேயாகும். இவற்றின் பெருமைகளும், சிவபெருமான் இத்தகைய

கோபத்துடன் காணப்படுதற்குக் காரணமும் வேறு இருப்பினும், சிவநாமத்தைச் சொல்லியும், சிவமூர்த்தத்தை வழிபட்டும் எத்துணைப்பேர் எத்துணை அமங்கலங்களினின்றும் நீங்கி மங்கலங்களைப் பெற்றிருக்கின்றார்கள்! அவைகளை யாவது நாம் நோக்குதல் வேண்டுமன்றோ!

நீடிய வாழ்நாள், மங்கலங்கள் எல்லாவற்றிலும் முதலாவதாகும். அதனை மார்க்கண்டேயர் சிவபெருமானை வழிபட்டே பெற்றார் என்பது நன்கறிந்தது. வாழ்நாள் இடையறவு படுதல், 'அவமிருத்து' எனப்படும். இந்த அவமிருத்து நிலை தேவர்கள் அனைவர்க்கும் ஒருகாலத்தில் உண்டாகியது; அதனைச் சிவபெருமானே நீக்கி, அவர்களுக்கு நீடிய வாழ்நாளை அளித்தார்.

என்றும் இறவாதிருக்கும் மருந்தைத் திருப்பாற்கடலைக் கடைந்து எடுத்து உண்ண வேண்டித் தேவர்கள் அனைவரும் கூடித் திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது அங்கு, 'ஆலகாலம்' என்னும் பெருவிடம் தோன்றிற்று. என்றுமே இறவாதிருக்க விரும்பிய தேவர்களை, அந்த விடம் அப்பொழுதே மடித்துவிடும்போலத் தோன்றிற்று. அதனால், அவர்கள் அனைவரும் சிவபெருமானிடமே அடைக்கலம் புகுந்தனர்; அவர் அந்த விடத்தைத் தாம் உண்டு பின்பு தேவர்கள் அமிர்தத்தைப் பெறச்செய்தார்.

சூரபதுமனாதி மூன்று அசுரர்கள் சிவபெருமானை வழிபட்டு, ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆளும் பெரிய அரசாட்சியை நூற்றெட்டு யுகம் தேவர்களும் வந்து பணிசெய்ய ஆண்டு, எண்ணற்ற மனைவி மக்களுடன் இன்ப வாழ்வு வாழ்ந்தனர். அவர்கள் அழிந்தது அவர்களது கொடுஞ்செயலாலன்றி வேறில்லை. இவ்வாறே இராவணன் மூன்றரைக்கோடி வயதையும், நல்வாழ்வையும் சிவபெருமானிடமே பெற்றான். இப்படிச் சிவபெருமானை வழிபட்டு அளவில்லாத நன்மைகளை அடைந்தோர் அளவிலர். அவ்வாறிருக்கவும், எலும்பும், கபாலமும் முதலியனவாய் இருக்கும் கோலத்தைக் கண்டு சிலர் அஞ்சுவார்களாயின், அவர்களை நாம் என்னனென்று சொல்வது!

எலும்பு, கபாலம் முதலிய கோலமும் உண்மையில் நன்மை செய்யத்தான் கொள்ளப்பட்டிருக்கின்றன. அஃது ஒருபுறம் இருக்க, இவற்றைக் கண்டு அஞ்சுவோர் அங்ஙனம் அஞ்சாது அணுகி வழிபடுதற்பொருட்டு அழகான கோலங்களையும் சிவபெருமான் கொண்டிருக்கின்றார். ஒருநாமம், ஓர்உருவம் இல்லாதவராகிய அவருக்கு ஆயிரம் திருநாமமும், ஆயிரம் திருவுருவங்களும் உண்டு. அவைகளில் அச்சத்தைத் தாராது அதிசயத்தைத் தரும் அழகிய வடிவங்களும் சில. அவற்றுள் ஒன்று திருமணக் கோலம். இஃது உமையம்மையை மணந்த காட்சியுடன் விளங்குவது. இத் திருக்கோலத்தைச் சிவபெருமான் கொண்டருளிய வரலாற்றைக் கந்தபுராணம் பின்வருமாறு கூறும்.

'பிரமதேவன் மகன் தக்கன். அவன் தன் தந்தை செய்த உபதேசத்தின்படியே சிவபெருமானை நோக்கித் தவம் செய்து, அளவற்ற ஆற்றலையும் செல்வத்தையும், உமையம்மையை மகளாகப்பெறும் நிலையையும் பெற்றான். அவ்வரத்தின்படியே உமாதேவி யமுனாநதியில் வலம்புரிச் சங்காகியிருந்து, தக்கன் அங்கு வந்து அதனைத் தன் கையில் எடுத்தபொழுது பெண்குழந்தையாகித் 'தாட்சாயணி' என்னும் பெயருடன் வளர்ந்து, சிவபெருமானையே மணந்துகொள்ள விரும்பித் தவம்செய்திருந்தாள். ஒருநாள் சிவபெருமான் உமையம்மை முன் தோன்றி, 'உன்னை நாம் விரைவில் மணந்துகொள்வோம்' என்று சொல்லி மறைந்தார். இதையறிந்த தக்கன் திருமணத்திற்குரிய எல்லாவற்றையும் செய்யச் சிவபெருமானும் அங்குத் தோன்றித் தக்கன் செய்த வழிபாடுகளை ஏற்று, அவன் தன்மகளைக் கொடுத்ததாக அவரது கையிற் சொரிந்த தாரைநீரையும் ஏற்றார். ஆயினும், அவன் உண்மை அன்புடையன் அல்லன் ஆகையால், திருமணத்தை முற்றிலும் முடித்துக் கொள்ளாமல் மறைந்துவிட்டார். திருமணத்திற்கு வந்திருந்த யாவரும் திகைத்துத் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றனர். தக்கன் சீற்றங்கொண்டானேயன்றிச் சிவபெருமானை வணங்கித் திருமணத்தை முடிக்கவேண்டும் என்று நினைக்கவில்லை.

உமையம்மை முன்போலவே தவச்சாலையில் தவத்தில் இருக்க, ஒருநாள் சிவபெருமான் அங்குவந்து உமையம்மையை விடைமீது ஏற்றிக்கொண்டு திருக்கைலையை அடைந்தார்.

இதனை அறிந்த தக்கன் பின்னும் பெருஞ்சினம் கொண்டானே யன்றித் திருந்தவில்லை. நாள் சில செல்லப் பிரமன் முதலியோர் தக்கனிடம் வந்து, கயிலைக்குச் சென்று சிவபெருமானைக் கண்டு வணங்குமாறு கூறிச்சென்றனர், ஆயினும், தக்கன் சிவபெருமானை வணங்கும் கருத்துடன் செல்லாமல், முன் நிகழ்ந்தன சிலவற்றைப்பற்றிக் கேட்டும் கருத்துடனே கயிலாயத்திற்குச் சென்றான். வாயில் காவலராகிய கணங்கள், 'முறைப்படி உத்தரவு பெற்று உள்ளே செல்லவேண்டும்' என்றார்கள். 'என் மருகனைக் காணச் செல்லுகின்ற என்னைத் தடுக்க நீங்கள் யார்' என்று தக்கன் சொல்லவும், கணங்கள் அவனை உள்ளே செல்லவிடவில்லை. அதனால், சீற்றமும், அவமானமும் கொண்ட தக்கன். 'உமக்கு இத்தகைய செருக்கைத் தந்த உங்கள் சிவபெருமான், இனி உலகிற்குத் தலைவனாய் இருப்பதைப் பார்க்கிறேன்' என்று சொல்லித் திரும்பிவிட்டான்.

சென்றவன், 'பிரமன் முதலிய தேவர் பலரையும் வருவித்து நிகழ்ந்தவற்றைக் கூறி, 'இன்று முதல் யாவரும் சிவனை வணங்குதல் கூடாது' என்று கட்டளையிட்டான். எனினும் பின்னொருமுறை பிரமன் வேள்வி ஒன்றைத் தொடங்கி அதில் சிவபெருமானுக்கு அவிப்பாகம் கொடுக்க முயன்றபோது, தக்கன் அவ்வாறு கொடுக்கவொட்டாமல் தடைசெய்துவிட்டான். அதனால், அவ்வேள்வி முடிக்கப்படாமலே விடப்பட்டது. அதன்பின் தக்கனுக்கு அஞ்சி ஒருவரும் வேள்வி செய்யாமலே இருந்தனர். அதைக்கண்ட தக்கன் தானே ஒருபெரு வேள்வியைச் செய்து, அதில் சிவபெருமானுக்கு அவிப்பாகம் கொடாத செயலை நடத்திக்காட்ட நினைத்து, அவ்வாறே செய்யத் தொடங்கினான். அவனது ஆணைக்கு அஞ்சித் தேவர் பலரும் அவ்வேள்விக்குச் சென்றிருந்தனர். உமையம்மையும் சிவபெருமானிடம்

விடைபெற்றுத் தன் தந்தையைத் திருத்தத் தானே சென்றாள். அவளைத் தக்கன் பலவாறு ஏசி இகழ்ந்தான். அதனால், உமையம்மை சினங்கொண்டு திரும்பியபின், சிவபெருமான் வீரபத்திரரை விடுத்து தக்கனது வேள்வியைத் தகர்த்துத் தேவர் பலரையும் ஒறுத்துத் தக்கன் தன் தலையை இழந்து ஆட்டுத் தலையை உடையவனாகும்படி செய்தார். அதனால் செருக்கொழிந்த தக்கன் பின் சிவபூசை செய்து புனிதனானான். மற்றும் தேவரும், யாவரும் முன்போலவே சிவ பூசை செய்து வாழ்ந்தனர்.

தக்கன் வேள்விக்குப் பின்பு ஒருநாள் உமையம்மை திருக்கயிலையில் திடுக்கென்றெழுந்து சிவபெருமானை நோக்கி, 'ஐயனே, தக்கன் மகள் என்று பெயர்பெற்றுள்ள இவ்வுடம்பை இனித் தாங்கமாட்டேன்; இங்கிலை நீங்குதற்கு ஒருவழியைச் சொல்லியருளவேண்டும்' என்று வணங்கினாள். அப்பொழுது இமயமலையரசன் உமையம்மையைத் தனக்கு மகளாக வருமாறு தவம் செய்திருந்தமையால், அதனைச் சிவபெருமான் உமாதேவிக்குக் குறிப்பிட்டு, 'நீ மலையரசனிடம் மகளாகச் சென்று இரு; நாம் வந்து மணந்து கொள்வோம்' என்று அருளிச்செய்ய, அங்ஙனமே உமையம்மை, மலையரசன்முன்னர் ஒரு பொய்கையில் தாமரை மலர் ஒன்றின்மேல் பச்சிளங் குழந்தையாய்க் கிடந்தாள். அதுகண்ட மலையரசன், 'நமது தவத்தின்பொருட்டு அம்பிகையே இவ்வாறு வந்துள்ளாள்' என்று உணர்ந்து மகிழ்ந்தெடுத்துச் சென்று தன் மனைவி கையிற்கொடுக்க அவளும் அதிசயித்து வாங்கி அன்புடன் பாலூட்டி வளர்க்க வளர்ந்து, ஐந்தாம் வயதிலே உமையம்மை சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்தாள். ஒருநாள் சிவபெருமான் அங்கு ஓர் அந்தண வடிவில் தோன்றிச் சில திருவிளையாடல்களைச் செய்து, பின் உண்மை வடிவினை உமைக்குக் காட்டி, 'உன்னை மணம் செய்துகொள்வோம் என்று அருளி மறைந்தார். அதனை அறிந்த மலையரசனும், மேனையும் பெருமகிழ்வுற்றனர்.

பின்பு சிவபெருமான் எழுவர் முனிவர்களை மலையரையனிடம் அனுப்பி மணம் பேசச் செய்தார்; மலையரையன்

உடன்படத் திருமணம் இமயமலையிலேயே நிகழத் தொடங்கியது. இது தக்கனிடத்தில் நிகழ்ந்த திருமணம்போல இல்லாமல், அயன், மால், தேவர், முனிவர், உருத்திரர் முதல் யாவரும் முற்றிலும் கண்டுகளிக்க மிகச் சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது சிவபெருமான், தேவர், முனிவர், சிவகணங்களுடன் திருக்கயிலையை விட்டுப் புறப்படும் பொழுது பிரம தேவன் பல பொன்னாபரணங்களையும், இரத்தினாபரணங்களையும் கொண்டுவந்து வைத்து, 'இவற்றை அணிந்தருள வேண்டும்' என்று வேண்ட, சிவபெருமான் புன்முறுவலுடன் அவற்றைக் கையால் தொட்டுவிட்டுப் பின், தாம் முன்பு அணிந்திருந்த பாம்பு, எலும்பு, தலை முதலியவைகளையே பொன்னாலும், இரத்தினத்தினாலும் ஆகிய நல்லாபரணங்களாகப் பிரகாசிக்கச் செய்தார். மற்றும் முன்னுள்ள கோலமே அப்பொழுதைக்குரிய மணவாளக் கோலமாய் விளங்கச் செய்தார். தேவர்களும் யாவர்களும் அதிசயித்து வணங்கினர். அக்கோலத்துடன் சிவபெருமான் இமயமலையை அடைந்த பின்பு எல்லாவகையான சிறப்புக்களுடனும் திருக்கல்யாணம் இனிது நிகழ்ந்தது. தேவரும், யாவரும் சிவபெருமானை அப்பொழுது மணவழகனை - கல்யாணசுந்தரனைக் கண்டு தாம் கண்பெற்ற பேற்றைப் பெற்றனர். அனைவர்க்கும் அவரவர்கட்கு ஏற்றவகையில் அருள்செய்து சிவபெருமான், உமையம்மையை அழைத்துக்கொண்டு திருக்கயிலைக்கு எழுந்தருளினார்.

உலகில் திருமணம் முதலிய மங்கலங்களை விரும்புவோர் இத் திருமணக்கோலப் பெருமானை வழிபடுவார்களாயின், அவர்கள் தம் எண்ணம் இனிதே நிறைவேறப் பெறுவர். இம் மங்கலத்தை விரும்புவோர்க்கு இதனை அருளுதற் பொருட்டே சிவபெருமான் தம் திருக்கோயில்களில் ஆண்டு தோறும் இத் திருக்கல்யாண கோலத்தைக் கொண்டருளுகின்றார். அந் திருக்காட்சி பங்குனித்திங்கள் தொட்டு ஆங்காங்கு மிகுதியாக நிகழ்ந்துவருதல் கண்கூடு. அவ்விடங்களிலும், தம் இல்லங்களிலும் மக்கள் திருமணக் கோலப் பெருமானை வழிபட்டு, மங்கலமாகிய மனைமாட்சி முதலிய நலங்களைப் பெறுவார்களாக.

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

உண்மைக் கல்வி

கல்லாத பேர்களே நல்லவர்கள் ! நல்லவர்கள் !!
கற்றும்அறி வில்லாதஎன்
கன்மத்தை என்சொல்கேன் ! மதியைஎன் சொல்லுகேன் !
கைவல்ய ஞானநீதி
நல்லோர் உரைக்கிலோ கன்மமுக் கியமென்று
நாட்டுவேன் ; கன்மம்ஒருவன்
நாட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று
நவிலுவேன் ; வடமொழியிலே
வல்லான் ஒருத்தன்வர வும்த்ரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன் ;
வல்லதமி ழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன் ;
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தைஎன் முத்திதருமோ ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

— *தாயுமானவர்.*

' உலகியல், மெய்ந்நெறி ' என்னும் இருநெறியினும் கல்வி இயன்றியமையாததொன்று, அதனை,

" கண்ணுடையர் என்பவர் கற்றோர் ; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் "

" விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் "

என்னும் திருக்குறள்களும்

' கற்றல் கேட்ட லுடையார் பெரியார் "

" கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன "

" கற்றிலேன் கலைகள் ஞானம்
கற்றவர் தங்க ளோடும்
உற்றிலேன் ஆத லாலே
உணர்வுக்குஞ் சேய னானேன் "

" கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி "

என்பனபோன்ற திருமுறைகளும் நன்கு உணர்த்தும். ஆயினும், கற்பவை எல்லாம் கல்வியல்ல. இம்மை மறுமைப் பயன்களுள் ஒன்றையும் தாராது, சிரிப்பிலும் களிப்பிலும் ஆழ்த்திப் பொழுதை வீண்படுத்துவதும், உள்ளத்தைத் தீய வழிகளிற் செலுத்தி வாழ்க்கையைப் பாழ்படுத்துவதும் போன்ற கல்விகளைக் கற்பதைவிடக் கல்லாதிருப்பதே நல்லது.

" அறம், பொருள், இன்பமும், வீடும் பயக்கும் .... கல்வி " என்று நீதிநெறி விளக்கமும், " அறம். பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே " என்று நன்னூலும் கூறுவதுபோன்று, மக்கள் அடைய வேண்டிய உறுதிப் பயன்களாகிய அறம்முதலிய நாற்பயன்களுள் ஒன்றையோ பலவற்றையோ தரும் கல்வியே கல்வி எனப்படும். அவற்றுள்ளும் பொருள், இன்பம் என்பவற்றைத் தரும் கல்வியைவிட, அறத்தைத் தரும் கல்வியே சிறந்த கல்வி. அவை எல்லாவற்றையும் விட, வீட்டைத் தரும் கல்வியே மேலானது.

அன்பு, அருள், அடக்கம், வாய்மை தூய்மை நடுவுநிலைமை பொறுமை முதலியவற்றைப் பற்றிக் கூறும் நூல்கள் அறத்தைத் தரும். அரசியல் முறைகளையும், மற்றும் தொழில்கள் பலவற்றையும் பற்றிக் கூறும் நூல்கள் பொருளைத் தரும். ஓவியம், இசை, நடனம் முதலிய கலைகளாய் உள்ளவை இன்பத்தைத் தரும். கடவுள் வழிபாட்டு நூல்கள் யோகநூல்கள். தத்துவ சாத்திரங்கள் முதலியவை வீட்டைத் தரும். ஆயினும். இந்நூல்களை

உள்ளவாறே இவற்றில் பற்றுவைத்து. இவற்றின் பொருள்களை யும் நன்கு உணர்ந்து கற்றாலன்றி, இவை இப்பயனைத் தர மாட்டா. சிலர் இவ்வாறு கற்காமல், பிறரது வற்புறுத்தலுக் காகவும், பெருமைக்காகவும் வேறு பல வகையிலும் கற்கின்றனர் ; அவையெல்லாம் உண்மைக் கல்விகள் ஆகா.

இன்னும். 'கற்றபடி நடத்தல்' என்னும் ஒழுக்கமும் கல்வி யின் ஒருபகுதியே ; அஃது இல்லையாயின், கல்வி நிறைவுடைய தாகாது. அதனால்தான், "கற்க கசடறக் கற்பவை" என்ற திருவள்ளுவர், "கற்றபின் - நிற்க அதற்குத் தக" என்பதையும் உடன் சேர்த்துக் கூறினர். ஆகவே, 'ஒழுக்கத்தோடு கூடிய கல்வியே கல்வியென அவர் கருதுகின்றார்' என்பது விளங் கும் கல்வியை, ஆழ்ந்தும், அகன்றும், நுணுகியும் நன்கு கற்றபோதிலும் அதற்கேற்ற ஒழுக்கம் இல்லாதபொழுது அது பிறர்க்கு ஒருவாறு பயன்படுமே யன்றித் தனக்கு ஒன்றும் பயனைத் தாராது இதுபற்றிக் கூறும்பொழுது குமரகுருபரர்,

"பிறர்க்குப் பயன்படத் தாம்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையர்"

என்றும், அப்பயன் யாது எனின்.

"தென்புலத்தார் - கோவினை வேலை கொளல்"

என்றும் கூறினர். தென்புலத்தார் கோ - தென்றிசைக் கோனாகிய யமன். அவனை வேலைகொள்ளுதலாவது, தம்மைப் பலகாலும் கொண்டு சென்று நரகத்தில் இடச் செய்தல். கல்வியை நன்கு கற்றும் ஒழுக்கம் இல்லாத ஒருவனை,

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான் அடங்காப்
பேதையிற் பேதையார் இல்"

எனப் பேதையர்களில் தலைமையானவனாகக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

பெரியோர் சிலர் ஒழுக்கத்தில் சிறந்திருந்தும், தங்களைத் திருவள்ளுவர் கூறிய இத்திருக்குறளுக்கு இலக்கியமாகக் கூறிக் கொள்கிறார்கள்.

" ஓதியும் உணர்ந்து பிறர்தமக் குரைத்தும்
உளமுதல் தான்அடங் காத
பேதையிற் பேதை யார்இலர் என்ற
பெரியவர் சொற்கிலக் கானேன் ;
கோதறும் ஆறு கொடுமுடிப் பவளக்
குன்றபவோத் திலகுகட் டழகா !
வேதகோ டங்கள் முழங்கிய போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே "

என்பது திருப்போரூர்ச் சந்நிதிமுறைப் பாடல்களுள் ஒன்று. இதனை இயற்றியவர், சிதம்பரசுவாமிகள். இவர் முருகப்பெருமானது திருவருள் கைவரப்பெற்றவர். இவர் தம்மை இவ்வாறு கூறிக்கொள்ளுதல், மேலும் அவர் கருதிய அனுபவநிலை கைகூடாமை பற்றியாம். இவ்வாறே தாயுமானவர் என்னும் பெரியவர் தம்மைக் கூறிக்கொள்ளும் பாடலே முதலில் தரப் பட்டது.

தாயுமானவர் இளமையிலேயே தமிழிலும், வடமொழியிலும் உள்ள இலக்கிய இலக்கணங்களைக் கற்ருர். தருக்கம் கற்ருர் ; வேதாந்தம் கற்ருர். பின்னர் மௌனகுருவின் அருளால் சித்தாந்தமும் கற்ருர். இவ்வாறு எல்லாவற்றையும் கற்ற அவர் தம்மைப் பற்றிச் சொல்லும்பொழுது, 'எழுத்தே அறியாத நிரட்சர குட்சிகளோடு என்னையும் ஒப்பிட்டுப் பார்ப்பின், கல்வி என்பதையே கனவிலும் அறியாத அவர்களே என்னைவிடப் பன்மடங்கு நல்லவர்களாவர்' என்கின்ருர். ஏன் ? 'நடைமுறையில் அவர்கட்கும் எனக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது ? அவர்களிடம் உள்ள குற்றங்கள் எல்லாம் என்னிடமுந்தான் இருக்கின்றன, அவர்கள் அவற்றைக் குற்றம் என்று அறியாமற் செய்கிருர்கள். நான் அவற்றைக் குற்றம் என்று அறிந்தே செய்கின்றேன் ; அதனால், குற்றம் என்று அறிந்தே குற்றங்களைச் செய்கின்ற என்னைவிட அவற்றைக் குற்றம் என்று அறியாமல் செய்கின்ற அவர்கள் சிறந்தவர்கள் தானே' என்பதுதான் அவரது கருத்து.

'விதி விலக்குகளை நன்கு அறிந்திருந்தும் விதித்தவற்றைச் செய்யவேண்டும் என்றும், விலக்கியவற்றை ஒழியவேண்டும் என்றும் எண்ணுத என்னுடைய அறிவை நான் என்னவென்று சொல்வேன் ! என் அறிவுதிருந்தாததற்குக் காரணம் நான்செய்த

கன்மந்தான் என்றால், அக்கன்மத்தின் ஆற்றலையும், 'விதியின் வழி மதி' என்பதற்கு ஏற்ப அக்கன்மத்தின் வழியே சென்று கெடுகின்ற எனது மதியையும் நான் என்னவென்று சொல்வேன் என்று கூறுகிறார்.

'இங்ஙனம் உண்மையில் நான் கல்லாதவரினும் கடைப்பட்டவனாய் இருப்பினும், என்னை எல்லாரினும் உயர்ந்தவனாகக் காட்டிக்கொள்ளப் பயன்படுகின்றது எனது கல்வி' என்பதைத் தாயுமானவர். அடுத்து மிக அழகாகக் கூறுகின்றார்.

கல்வியைக் கற்றவர்களிடையே சில வேளைகளில் சொற்போர் –தர்க்கவாதம் நிகழ்வதுண்டு. இது, தத்துவத் துறையில் மிகுதி. அதனுள், மோட்சத்திற்கு வழிகன்மமா? ஞானமா? என்பது ஒரு பெரிய ஆராய்ச்சி. அதில், 'கன்மமே மோட்சத்தைக் கொடுக்கும் என்பது ஒரு கொள்கை. 'கன்மம் மோட்சத்தைக் கொடாது; ஞானமே மோட்சத்தைக் கொடுக்கும்' என்பது மற்றொரு கொள்கை, இத்தகைய வாதத்தில் எதிர்ப் பக்கத்தவர், ஞானமே மோட்சத்திற்கு வழி' என்று கூறினால், தாயுமானவர். 'அஃது இல்லை; கன்மந்தான் மோட்சத்திற்கு வழி' என்று சாதிப்பாராம். இனி, 'கன்மமே மோட்சத்திற்கு வழி' என்று சிலர் கூறினால் இவர், ஞானந்தான் மோட்சத்திற்கு வழி' என்று சொல்லி அவர்களது கொள்கையை மறுப்பாராம். இவற்றுள், 'ஞானம் மோட்சத்திற்கு வழி என்பதே உண்மை' என்பதை விளக்க, அதனை. 'கைவல்ய ஞானநீதி நல்லோர் உரைக்கில்' என்று சிறப்பித்துக் கூறினார். இதனால், இத்தகைய கல்விகளிலும், தர்க்க வாதத்திலும் இவர் எவ்வளவு தேர்ச்சி பெற்றிருந்தார் என்பது தெளிவாகும்.

இனி, 'மொழிவகையில் நோக்கினால், வடமொழி வித்வான்களிடத்தில் தமிழ் மொழியில் உள்ள சில இலக்கிய இலக்கணங்களைச் சொல்லி அவர்களைத் திகைக்க வைப்பதும், தமிழ்ப் புலவர்களிடத்தில் வடமொழியில் கற்ற சில வாக்கியங்களைச் சொல்லித் திகைக்கவைப்பதும்' எனது வழக்கம்' என்கின்றார் தாயுமானவர். இது பெரும்பாலும் ஒன்றையும் நிரம்பக் கல்லாமல், அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கற்றுக் கல்லாத மேற்கொண்டொழுகுவாரது செயலாகும். இவையெல்லாம் பிறரது கொள்கையை உண்மையில் மறுக்காமலும், உண்மையில் அவரைவிடச் சிறந்து நில்லாமலும் அவர்களை மருட்டிவிடப்

பயன்படுமேயன்றி, எனக்கு என்ன பயனைத் தரும். இகபர நலங்களைத்தான் தருமா? அல்லது முத்தியைத்தான் தருமா? என்பதே அவர் முடிவாகக் கூறுவது ஆனால், கற்ற கல்வியால் தாம் பயன்கொள்ள நினையாமல், இவ்வாறு வீண் வாதங்களைப் புரிந்து பிறரை மருட்டிக்கொண்டிருந்தவர் தாமா தாயுமானவர்? இல்லை. அறம், பொருள், இன்பம் எல்லாவற்றினும் மேலான வீடு பேருகிய இறைவனோடு இரண்டறக் கலத்தலைப் பெறு தற்கே இரவும், பகலும் இடையருது உழைத்தவர் ஆவர். இதனை,

> "ஆணவத்தோடு அத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
> தானுவினேடு அத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ"

என்னும் அவரது வாக்கிலிருந்து நன்கு அறிகின்ருேம்.

அங்ஙனமாயின், அவர் தம்மை இவ்வாறு கூறிக்கொள்ளக் காரணம் யாது? எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவி தான் யாகினும் அரிதரிது - இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ! யாது வருமோ! அறிகிலன்' என்று கலங்கு கின்ற அவர், இத் தேகம் நீங்குவதற்கு முன்னே நிட்டானு பூதியை அடைந்துவிட வேண்டும்; அவ்வாறு அடையும் நிலை வரவில்லையே என்னும் வருத்தத்தினுல் இவ்வாறு கூறுகின்ருர். எனினும் உண்மைக் கல்வி எது? பொய்க் கல்வி எது? அவற்ருல் அடையப்படுவன யாவை என்பவற்றையெல்லாம் தெளிவுறக் காட்டுகின்றன இவரது வாக்குக்கள். அறம் முதலிய உறுதிப் பொருள்களை உணர்தற் பொருட்டு அந்நூல்களை நிரம்பக் கற்று, அவற்ருல் வரும் புகழ் பொருள் முதலியவற்றைப் பெரும் பயனுக நினையாமல் அவை எல்லாவற்றினும் மேலான முத்திப் பயன் ஒன்றையே பெரும் பயனுகக் கொண்டு, அதனைப் பெற முயல்வதே உண்மைக்கல்வி என்பதும், அங்ஙனம் இல்லையேல் வருந்திக் கற்ற கல்வியாற் பெரும்பயன் ஒன்றும் இல்லை என்பதும் இவற்ருல் நன்கு விளங்கும்.

> "கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்ருள் தொழாஅ ரெனின்"

என்பது திருக்குறள்.

" கற்கஇடர்ப் பட்டுமிகக் கற்றவெல்லாம் கற்றவர்பால்
தற்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ - நற்கருணை
வெள்ளம் அடங்கும் விரிசடையார்க் காளாகி
உள்ளம் அடங்கஅல்ல வோ "

என்பது எங்கள் ஆதி பரமாசாரியர் வாக்கு.

இவ்வாறு தமக்குள்ள குறையைத் தாயுமானவர் யாரிடம் கூறிக்கொள்கின்றார்? சித்தர்களிடத்தில் கூறிக்கொள்கின்றார். ஏன்? சித்தர்கள் எல்லாம் செய்ய வல்லவர்கள். அவர்கள் மண்ணைப் பொன்னாக்குவார்கள்; சொர்க்கத்தைப் பூமியாக்கு வார்கள். அணுவை மேருவாக்குவார்கள்; மேருவை அணு வாக்குவார்கள். எண்ணற்ற காலம் இறவாமல் வாழ்வார்கள். அதனால் அவர்களது கூட்டத்தை இவர், 'வித்தகச்சித்தர் கணம்' என்கிறார். இவர்களது பெருமைகளையெல்லாம் தாயு மானவர் இத்தலைப்பில் பல பாடல்களில் கூறியுள்ளார். எல்லாம் செய்ய வல்ல இவர்கள், தமமை விரைவில் நிட்டானு பூதி யுடையவராகவும் செய்து விடுவார்களன்றோ என்பது தாயுமானவரது உள்ளத்தில் எழுந்த ஒரு கருத்து. 'மானிடப் பிறவி கிடைத்தற்கரியதொன்று; ஆயினும், இது நிலையில்லா தது; இதனை யான் சிவானுபூதி பெறும் வரையிலும் நிலைத்து நிற்கச் செய்துகொள்ளும் வழியை எனக்குக் காட்டவேண்டும்' என்பதையும் இவர்களிடமே தாயுமானவர் வேண்டிக்கொள் கின்றார். இப்பாடல்களைப் படித்துணர்ந்தால், நாமும் நமது மானிடப் பிறப்பைப் பயனுடையதாகச் செய்துகொள்ளலா மன்றோ!

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

பார்வையிட்டதில் கோயில் உள்ளும் புறமும் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டுள்ளதும், தரிசனமும் ஒய்ந்த மனதுக்கு உற்சாகம் ஊட்டக்கூடியதாக உள்ளது.

(ஒ-ம்.) சி. சுப்பையன்,
Dy. Director, Rural Development,
Madras.

13—3—67.

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 26, இதழ் 5, பக்கம் 266 இன் தொடர்ச்சி)

இருவினைகளின் தோற்றம் நிலை இறுதிகள்

மாணாக்கன் : ஏனைய காரியங்கட்குக் காரணம் இருத்தல் போல, இருவினையாகிய காரியத்திற்கும் மூலகன்மமாகிய காரணம் உண்டு' என்பதை அறிந்தேன். அக்காரணத்தினின்றும் இருவினைகள் தோன்றி நின்று அழிதலும், அவை உயிரைப் பந்தித்தலும் எவ்வாறு ?

ஆசிரியர் ; உயிர்களின் அறிவு ஆணவமலம் காரணமாக அகநோக்கத்தை இழந்து புறநோக்கத்தையே உடையதாய்ப் புறப்பொருள்களை நோக்கிச் செல்லும். அவ்விடத்து அப்பொருள்களின் இயல்பு காரணமாக அவற்றின்மேல் விருப்பு வெறுப்புக்கள் நிகழும். பின்னர் அவ் விருப்பு வெறுப்புக் காரணமாக அவற்றினிடத்து நல்ல செயலையாவது தீய செயலையாவது செய்ய நினைத்தலும், அங்ஙனம் நினைத்தவற்றைச் சொல்லுதலும், பின் சொல்லியவாறே செய்தலும் ஆகியவற்றை நிகழ்த்தும். எனவே, அவ்வகையினால் நல்வினையும் தீவினையும் ஆகிய இருவகை வினைகள் தோன்றுவனவாம். நல்லன தீயனவற்றைச் செய்ய மனத்தால் நினைக்கும் நினைப்பினால் தோன்றுவன, 'மானத கன்மம்' என்றும், வாயினால் அவற்றைச் சொல்லும் சொற்களால் தோன்றுவன, 'வாசிக கன்மம்' என்றும், உடலால் செய்யும் செயல்களால் தோன்றுவன, 'காயிக கன்மம்' என்றும் சொல்லப்படும். எனவே, உயிர்கள் தம் மனம், மொழி மெய் என்னும் மூன்றினாலும் நல்வினை தீவினைகளைத் தேடிக்கொள்கின்றன என்பது தெளிவாகும்.

> " உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
> கள்ளத்தால் கள்வேம் எனல் "

என்றாற் போலும் வாக்கியங்கள், மனத்தால் வினை உண்டாதலையும்,

"நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து"

என்றாற்போலும் வாக்கியங்கள் வாயால் வினை உண்டாதலையும்,

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்றாற்போலும் வாக்கியங்கள் உடம்பால் வினை உண்டாதலையும் தெரிவிக்கும்.

மாணாக்கள்; மன மொழி மெய்களால் தோன்றிய வினைகள் பின் எவ்வாறு நிலைத்து நின்று, அவற்றைச் செய்த உயிர்களுக்குத் தம் பயனைத் தரும்?

ஆசிரியர்: மன மொழி மெய்களால் நினைவு, சொல், செயல் என்பன தூலமாய் நிகழ்ந்த நிலையினின்றும் நீங்கிச் சூக்குமமாய் நிலைபெற்று நின்று, பின் காலம் வரும்பொழுது தம் பயனை உயிர்கட்குத் தரும். இச்சூக்கும நிலையில் இவை உயிர்களது உள்ளத்தையே பற்றுக்கோடாகக்கொண்டு கிடக்கும். 'அறம், மறம்' என்று தமிழிலும், 'புண்ணியம், பாவம்' என்று வடமொழியிலும் சொல்வது இச்சூக்கும வினைகளையே. இவற்றிற்கு ஏதுவாதல் பற்றி, மேற்குறித்த தூல வினைகளையும் ஆகுபெயர் முறைபற்றி இப்பெயர்களால் கூறுதல் உண்டு.

மாணாக்கன்: நினைவாயினும், சொல்லாயினும், செயலாயினும் நிகழ்ந்த அப்பொழுதே அழிந்தொழிதலின், 'அவை சூக்குமமாய்ப் பின்னும் நிலைத்து நிற்கும்' என்றல் எப்படி?

ஆசிரியர்: 'அழிதல்' என்பது, 'தூல நிலையை விட்டுச் சூக்கும நிலையை அடைதல்தான்' என்றும், 'எந்தப் பொருளும் எக்காலத்திலும் அடியோடு இல்லாதொழிதல் இல்லை' என்றும் முன்பு பலமுறையும் கூறி வந்ததை இப்பொழுது மறந்துவிட்டாயோ?

மாணாக்கன்: ஆம்! ஆம்; அதனை இப்பொழுது மறந்தே வினாவினேன்; பொறுத்தருள்க. தூலமாய் நிகழ்வதே இருவினைகளுக்குத் தோற்றமும், பின் அவை சூக்குமமாய் நிற்றலே நிலைபேறும், பின்காலம் வந்தபொழுது தம் பயனைக் கொடுத்து நீங்குதலே அவற்றிற்கு அழிவும் ஆகும்போலும்!

வினைகளின் மூவகை நிலை

ஆசிரியர் : ஆம்! அப்படித்தான். நல்லனவும், தீயனவுமாகச் செய்யப்படும் தூல வினைகள் 'ஆகாமியம்' எனப்படும். அவற்றது அழிவில் சூக்குமமாய்ந் தோன்றி நிற்கும் புண்ணிய பாவங்களாகிய வினைகள் 'சஞ்சிதம்' எனப்படும். இச்சூக்கும வினைகள் பின் வந்து பயன் கொடுக்கும்பொழுது 'பிராரத்தம்' எனப்படும். எனவே, வினைகள், ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம்' என்னும் மூவகை நிலைகளைப் பெறுதல் அறியப்படும்.

ஆகாமியம், 'எதிர்வினை, வருவினை, மேல்வினை' என்னும் பெயர்களாலும் சொல்லப்படும். சஞ்சிதம், 'அபூர்வம், பழவினை, தொல்வினை, கிடைவினை' என்றும் சொல்லப்படும். பிராரத்தம், 'ஊழ்வினை' நுகர்வினை' என்றும் சொல்லப்படும்.

வினை பயன்தரும் முறை

மாணாக்கன் : ஆகாமியம் எத்துணைக்காலம் சஞ்சிதமாய்க் கிடந்து, பின் எவ்வாறு வந்து பயனைக் கொடுக்கும்?

ஆசிரியர் : சஞ்சிதம் பிராரத்தமாய்ப் பக்குவப்படும் வரையில் கிடந்து, பின் பிராரத்தமாய் வந்து பயன் கொடுக்கும்.

மாணாக்கன் : 'பக்குவம்' என்பது யாது? காய் பழமாதல், குழவிப் பருவத்தன் காளைப் பருவத்தனாதல் முதலியன போன்றதா? ஆம் எனின், இவையெல்லாம் தூலப் பொருளினிடத்தே நிகழ்வனவன்றிச் சூக்குமப் பொருளிடத்தே நிகழும் என்றல் பொருந்துமோ?

ஆசிரியர் : 'வினை பக்குவப்படுதல்' என்பது, காய் பழமாதல் முதலியன போன்றது அன்று; மற்று, தன் பயனைத் தான் தருதற்குரிய எல்லாச் சூழ்நிலைகளும் வாய்க்கப்பெறுவதேயாம். வினை, அச்சூழ்நிலைகளைப் பெற்றுத்தரும் பயன், 'சாதி, ஆயு, போகம்' என மூன்றாகும். சாதி - பிறக்கும் இனம். இஃது, அக்காலத்தில் அந்தணர் முதலிய சாதிகளாகச் சொல்லப்பட்டது. இக்காலத்தில், முற்போக்கு அடைந்த இனம், பிற்போக்குள்ள இனம் முதலாகச் சொல்லப்படுகின்றது. மற்றும் எந்த நாட்டிலும், எந்த வகையிலேனும், எவையேனும் சில பிரிவுகள் இருந்தே வருதல் கண்கூடு. இதனால் 'இப்பிரிவுகளை நீக்கக்கூடாது என்று' சொல்லவில்லை. வறுமை, நோய் முதலியவை எங்கும் இருக்கத்தான் செய்கின்றன. 'அவற்றை

நீக்கி முயற்சி செய்தல் கூடாது' என்று யார் சொல்லமுடியும்? முடியாது. ஆனால், யார் என்ன முயற்சிகள் செய்தாலும் 'வினையின் பயனாக அவை இருந்தே தீரும்' என்பது மட்டும் தான் இங்குச் சொல்லப்படுகிறது அதுபோலவே, யார் எங்கே எந்த வகையான முயற்சிகள் செய்யினும், வினையின் பயனாகிய சாதிப் பிரிவு ஏதேனும் ஒருவடிவத்தில் மக்களிடை இருந்துதான் தீரும் என்பது மட்டுமே இங்குச் சொல்லப்படுகிறது.

இன்னும் இங்கு, 'சாதி' என்பது. படைப்பு ஒரு வகையாகக் காணப்படாது, பறவை, விலங்கு, மக்கள், தாவரம் முதலாகப் பல்வேறு வகையாகக் காணப்படுவதையே சிறப்பாகக் குறிக்கின்றது. அந்த வகையில் ஒவ்வோர் இனத்திலும் பல பிரிவுகள் காணப்படுகின்றன. இவை எல்லாம் வினையினால் ஆவனவே என்பதே இங்கு விளக்கப்பட்டது,

'ஆயு' என்பது ஆயுள்; வாழ்நாள். நீண்ட வாழ்நாள், குறுகிய வாழ்நாள் என்பனவும் வினையின் பயனே, 'போகம்' என்பது ஒவ்வோர் உயிரும் அனுபவிக்கும் இன்பத் துன்பங்கள். 'இவை வினையின் பயனே' என்பது பலவிடங்களிலும் சொல்லப் பட்டது.

இனிப் பிராரத்த கன்மம் பயன் தருங்கால் தான் நேரே நின்று தாராது, எவையேனும் சிலவற்றை வாயிலாகக் கொண்டே தரும். அவ்வாயில்கள் பற்றிப் பிராரத்தம், ஆதியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம்' என மூன்றாகச் சொல்லப் படும். அவற்றுள் தன்னாலேனும், பிற உயிர்களாலேனும் வருவன, ஆதியான்மிகம். நிலநடுக்கம், பெருமழை, பெரு வெள்ளம், இடிவீழ்தல், தீமிகுதல், சூறவளியடித்தல் முதலிய பூதச் செயல்களால் வருவன ஆதிபௌதிகம். பேய், பூதம். தீய தெய்வங்கள், இயமன் முதலிய தேவர் பகுதியால் வருவன ஆதிதைவிகம்.

மாணாக்கன்: வினைகள் பயன் தருங்கால், முன்னர்ச் செய்த வினை முன்னரும், பின்னர்ச் செய்தவினை பின்னருமாகச் செய்த முறைப்படியே வந்து பயன் தருமோ? மாறியும் வந்து பயன் தருமோ?

ஆசிரியர்: 'ஒரு பிறப்பில் செய்தவினை, அடுத்த பிறப்பிற்றான் வந்து பயன்தரும்' என்பது பொதுவிதி. ஆயினும். மிகப் பெரிய புண்ணியங்களும், மிகப்பெரிய பாவங்களும் செய்த பிறப் பிலேயே வந்து பயன்தருதலும் உண்டு என்பது,

" குற்றொருவரைக் கூறை கொண்டு
கொலைகள் சூழ்ந்த களவெலாம்,
செற்றொருவரைச் செய்த தீமைகள்
இம்மையேவரும் மெய்ம்மையே "

என்றற்றொடக்கத்து அருள் மொழிகளால் அறியப்படும் (திருமுறை - 7.35.4.). அதனால், வினைகள், தாம் செய்யப்பட்ட முறையிலன்றிப் பின் முன்னாக மாறி வந்து பயன் தரும். அஃது அவ்வவ்வினையின் தன்மைக்கேற்ப நிகழ்வதேயாம்.

"தொடங்கடைவின் அடையாதே தோன்றும் மாறி"

என்பது சிவப்பிரகாசம். உழவன் ஒருவன், முன்பு பனை விதையை இட்டுப் பின் வாழையை நட்டுப் பின் கரும்பை நட்டு அதன்பின் கீரையை விதைப்பானாயின், அவை அவன் விதைத்த முறைப்படியோ பயனைத் தரும்? முன்னது பின்னும், பின்னது முன்னுமாகவன்றோ பயனைத் தரும் என்பதை, வினைகள் பின் முன்னாக வந்து பயனைத்தருதல் மாத்திரைக்கு உதாரணம் காட்டுவர். எனவே, வினைகள் தோன்றி நின்று பயனைக் கொடுக்குமாற்றினை இங்ஙனம் உணர்ந்துகொள்க.

(தொடரும்.)

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 3 — 00 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B. A. B. L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

வளர்ப்புப் பறவை

சி. அ.

மக்கள் வாழ்க்கையில் நிகழும் செயல்களில், சில பறவைகளை வீட்டில் வைத்து வளர்ப்பதும் ஒன்று. கிளியை அதன் மழலைச் சொல் கேட்பதற்காகவே வளர்ப்பர். மயிலும், மாடப் புறாவும் கண்ணுக்கு இனிய காட்சி வழங்கும். அன்னமும் அழகு பறவையாகவே சொல்லப்படுகின்றது. பழங்காலத்தில் வளர்ப்புப் புறாக்கள் மூலமே கடிதங்களை அனுப்பினர் என்று அறிகின்றோம். சிலர் வீடுகளில் கோழி வளர்ப்பதைப் பற்றிச் சொல்லத் தேவை இல்லை. இப்படிப் பலவகைக் கருத்துப்பற்றி மக்கள் பறவைகளை வளர்ப்பதில் ஈடு படுகின்றனர், ஆனால், இந்த வளர்ப்புப் பறவைகளால் சில வேளைகளில் தொல்லைகள் நேர்வதும் உண்டு. வீட்டு முற்றத்தில் வைக்கப்படும் உணவுப் பொருள்களை இவை தாமாகவே சென்று மிதித்தும், தின்றும் பாழாக்குவதும், வயல்களில் விளைந்துள்ள தானியங்களைச் சென்று கவர்ந்து தின்பதும் போல்வன இத்தகைய தொல்லைகள். மேலும் இப்பறவைகளில் பொல்லாத குணம்படைத்த சில பறவைகளும் இருப்பதுண்டு. இவைகளை ஒன்றும் செய்ய இயலாமல், வளர்ப்பவர்கள் சில சமையம் திகைப்பார்கள். இப்படிப்பட்ட பறவைகள் ஐந்தைக் குறிப்பிடுகின்றார் திருமூலர்.

ஒரு சிறிய வீடு. அதில் குடியிருக்கச் சென்றான் எளியவன் ஒருவன். அதில் அவனுக்கு முன்பே ஐந்து பறவைகள் வாழ்ந்து, அதனை விட்டுப் போகாது இருந்தன. குடியிருக்கச் சென்ற எளியவனும் அவற்றின் அழகு, நடை, குரல் முதலியவைகளில் ஈடுபட்டு அவைகளோடு நெருங்கிப் பழகிவிட்டான். ஆனால் அவை ஐந்தும் வெவ்வேறு இனமான பறவைகள். ஆகையால், அவை ஐந்தும் எப்பொழுதும் ஓரிடத்தில் சேர்ந்திருப்பதில்லை. ஐந்தும் ஐந்து நிறம். ஒவ்வொன்றும் உண்ணும் உணவு வேறு வேறு, குரல் வகைகள் வேறு, பொதுவாக ஐந்துமே பொல்லாத குணம் வாய்ந்தவை. வீட்டில் தங்காமல் வெளியே ஓடி விடுவதே அவற்றின் இயற்கை. ஓடுவது ஓரிடத்தில் அன்று;

வெவ்வேறு இடத்தில். இந்தப் பறவைகளிடத்தில் மிகவும் அன்பு வைத்த அவ்வெளியவன், ஒவ்வொன்றும் ஓடும் இடத்தில் தானும் ஓடி அவைகளை வீட்டில் கொண்டுவந்து சேர்க்க முயலு வான். ஒன்றைக் கொண்டு வந்து சேர்க்கும் பொழுது முன்னே வீட்டில் இருந்தவைகளில் மற்றொன்று வெளியே ஓடிவிடும், இவ்வாறு ஓடும் நிலையில் இந்த ஐந்தையும் ஒன்று சேர்க்க முயல்வதிலேயே அவ்வெளியவனுக்குக் காலமெல்லாம் கழிந்தது. வெளியில் சென்ற அவைகளை அச்சுறுத்திக்கொண்டு வருதற்கு அவன் கையில் கோல் ஒன்றையும் வைத்திருந்தான். இருந்தும் என்ன பயன். கடைசியாக அலுத்துப்போன அவன் அந்த வீட்டை விட்டு நல்ல முறையில் வெளியேறுமல், ஒருவரும் அறியாதபடி போய்விடக் கருதினான், வீடு சிறிதாய் இருப்பி னும், அதற்கு வாயில்கள் ஒன்பது, முன்வழி, பின்வழி இரண்டும் பெருவழி. மற்றைய ஏழும் சிறுவழி. ஏதோ ஒரு வழியினால் ஒருநாள் ஒருவருக்கும் சொல்லாமல் சென்று விட்டான்.

இந்த அல்லல்களை எல்லாம் அடைந்த அந்த எளியவன் யார்? நாம் ஒவ்வொருவருந்தான். எளியவன் - ஆன்மா, வீடு - உடம்பு. ஒன்பது வாயில் - நவத்துவாரம். ஐந்து பறவைகள் - பஞ்சேந்திரியங்கள். பஞ்சேந்திரியங்களும் ஒன்று அறிவதை மற்றொன்று அறிவதில்லை. அகத்தில் உள்ள பொருளை அறி யாது புறத்தில் உள்ள பொருளை அறிவதுதான் இவற்றின் இயற்கை. பஞ்சேந்திரியங்களை அடக்க முயலும் அறிவே கோல். அந்தக் கோலைக்கொண்டு ஆன்மா எவ்வளவு முயன்று லும் பஞ்சேந்திரியங்களை அடக்க இயலுவதில்லை; ஆனால், இறைவன் திருவருளாகிய கோலைப்பற்றினால் இவைகளை அடக்க லாம். இக் கருத்துக்களையே திருமூலர் பின்வரும் திருமந்திரத் தால் வெளியிடுகின்றார்.

“ புலம் ஐந்து ; புள் ஐந்து ; புள் சென்று மேயும்
நிலம் ஐந்து ; நீர் ஐந்து ; நீர்மையும் ஐந்து ;
குலம் ஒன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன் ;
உலம்வந்து போம்வழி ஒன்பது தானே ”

புலம் - உண்ணப்படும் பொருள் ; தானியம். இது ஐந்தா வது, 'ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்' என்ற வகையால். நிலம் - வயல் ; இது ஐந்தாவது, 'செவி, தோல், கண், நாக்கு,

மூக்கு’ என்னும் உறுப்புக்களால், இவற்றில் நின்று ஓசை முதலியவற்றை அறியும் சக்தியே ஐந்து புள் (பறவை). நீர் ஐந்து, பஞ்ச பூதங்கள். நீர்மை - குணம். ஒவ்வோர் இந்திரியத்தின் தன்மையும் ஒவ்வொருவகை ஆற்றலின், நீர்மையும் ஐந்தாகிறது. குலம் ஒன்று கோல் - மேன்மை அமைந்த கோல். இவற்றால் பஞ்சேந்திரியங்களை அடக்கும் அருமையை உணரலாகும்.

ௐ

விசேஷ நாட்கள்

10—5—67 முதல் 10—6—67 முடிய

10-5—67 வேளூர் கிருத்திகை
11—5—67 மங்கயற்கரசியார் திருநக்ஷத்திரம்
13—5—67 விறன்மிண்ட நாயனார் திருநக்ஷத்திரம்
18—5—67 24ஆவது மகாசந்நிதானம் அவர்களின் குருபூசை
20—5—67 தருமபுரம் ஞானபுரீசுவரர் உத்ஸவ கொடியேற்றம்
26—5—67 திருஞானசம்பந்தர். முருகநாயனார், திருநீலநக்க நாயனார், திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் திருநக்ஷத்திரங்கள்
29—5—67 ஸ்ரீ ஆதி தருஞானசம்பந்தர் குருபூசை
30—5—67 ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் பட்டணப் பிரவேசம்
5-6—67 கழற்சிங்கநாயனார் திருநக்ஷத்திரம்
6—6—67 மண்டலாபிஷேகக் கிருத்திகை
10—6—67 நம்பியாண்டார் நம்பிகள் திருநக்ஷத்திரம்.

वाराणसीप्रशंसनम् ॥

ஸ்ரீ. நீலகண்ட சர்மா.

अस्ति धर्मपुरं नाम्ना मायूरनिकटे पुरम् ।
शैवधर्ममताध्यक्षो वर्तते यत्र विश्रुतः ॥
दाने चाश्रितवात्सल्ये सर्वदा शिवचिन्तने ।
जाने धर्मपुराधीशसमानं न क्षमातले ॥
सन्निगृह्येन्द्रियग्रामं शिवे सन्न्यस्तमानसः ।
माठापत्यमसक्तोऽयं कुरुते धर्मनिष्ठया ॥
प्रशान्तस्मेरवदनो मितभाषी च निर्ममः ।
निरन्तरशिवध्यानतेजः पुञ्जायितो ह्यसौ ॥
कृपा धर्मपुराधीनमहासन्निधिवर्षिता ।
एतावद्भाग्यवन्तं मामकरोद्विश्वविश्रुता ॥
वाराणसीमवाप्तोऽहमद्य पुण्यान्महीयसः ।
दर्शनाद्विश्वनाथस्य गङ्गास्नानाच्च मुक्तिदाम् ॥
अद्य वाराणसीयात्रा चिरचिन्ताफलायिता ।
विमुच्य सर्वपापेभ्यः सफलं जन्म मेऽकरोत् ॥
केदारनाथकृपया ज्ञानवैराग्यदायिनी ।
अष्टसिद्धिप्रदा पुंसामात्मानन्दानुभूतिदा ॥
कीर्तनैर्विश्वनाथस्य विशालाक्ष्याश्च नामभिः ।
वेदघोषैश्च नितरां मुखरीकृतदिङ्मुखा ॥
गङ्गाप्रवाहसंजातमर्मरध्वनिमिश्रिता ।
सन्यासिमुखनिष्पन्नप्रणवध्वनिमूर्च्छिता ॥
एषा काशी कामितार्थफलदानविचक्षणा ।
विशालाक्षीविश्वनाथसान्निध्याद् भुक्तिमुक्तिदा ॥
गत्वा काशीं विश्वनाथमभिवन्द्य निमज्ज्य च ।
गङ्गायां लभते मर्त्यो ह्यचलेन परां गतिम् ॥
संवत्सरे पयोवारिमिते मीनं गते रवौ ।
रचिता द्वादशश्लोकी तृतीये भृगुवासरे ॥

'அமுதிற்குத் தமிழென்று பேர்'

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 26, இதழ் 5, பக்கம் 271 இன் தொடர்ச்சி)

தொன்று நிகழ்ந்ததனைத்தும் உணர்ந்திடும் சூழ்கலைவாணர்களாலும் இவள் என்று பிறந்தவள் என்பதை உணரமுடியவில்லையாம் அத்தகைய தெய்வத் தமிழன்னையின் தண்ணென்ற மலர்ப்பாதங்களைத் தழுவிக் கிடக்கும் எட்டுத்தொகை நூல்களில் - இறுதி இடத்தை எட்டாவது இடத்தை அடைந்து விளங்குவது பழகுதமிழ்ச் சொல்லோவியமெனப் போற்றப் பெறும் புறநானூறு. புறத்திலும் அறங்கண்ட தமிழ்க் குடியினருக்கு இது ஒரு தீந்தமிழ்ப் பெட்டகம். பொன்னும் மணியும் ஒரே இடத்தில் தோன்றுவதில்லை. ஆனால் அருவிலை நன்கலம் அமைக்குங்காலை - ஒரே இடத்தில் அமைந்து அழகும் ஒளியும் பெறுவதுபோல என்று கண்ணகனார் என்னும் புலவர் பெருமான் உவமையொன்றை ஆளுவார். அதையொத்து நானூறு விலைமதிக்க ஒண்ணா மணிகள் - ஒருசேர இணைந்தொளிரும் காவியம்தான் புறநானூறு. இதனுள் அரசர் பலர் பாடிய பாடல்கள் உண்டு, புலவர் குழாம் அருளிய பாடல்கள் அநேகம். பெண்பாற் புலவர்களுக்கும் இதில் இடம் உண்டு.

வள்ளுவரின் வான்மறையைப் பொன்னேபோல் போற்றி ஆலத்தூர் கிழார் என்ற அரும்பெரும் புலவர் தக்க இடத்தில் அதனைப் பாராட்டியுள்ளார்.

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

என்ற குறளை அறத்தின் விதியென்றே கொண்டார் புலவர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் வண்மையையும் பெருமையையும் பாட எண்ணினார். அப்படித் தான் அதனைப் பாடாவிட்டால் தனக்கும் செய்நன்றி மறந்த

பாவம் வரும் என்று தெரியும். ஆகவே வளமார்ந்த செந்தமிழில் வாழ்த்தத் தொடங்கினர்.

" நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ "

நீயோ - பாணர்க்கும் புலவர்க்கும் செல்வத்தை அள்ளி அள்ளி வழங்குகிறாய். அதனை உணர்ந்து எங்கோன் வளவன் வாழ்க என்று . உனது பீடுகெழுநோன்தாள் பாடேனாயின், ஞாயிறு - முறைப்படி என் நாட்டில் தோன்றா தொழியும். அக்குறை நீங்க நான் உன்னை வாழ்த்துகிறேன். சான்றோர் செய்த நல்வினையால்

" இமையத் தீண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பல் துளியினும் வாழிய பலவே " —புறம் - 34.

வாழ்த்தும் விதத்திலும் பலவகை உண்டு, மழைத் துளியினும் பலவாகிய ஆண்டுகள் வாழ்க! என வாழ்த்துவதுபோல மணலினும் பலவாக வாழ்க! என்று வாழ்த்துதலும் இலக்கியத்தில் உண்டு. திருச்சீரலைவாய் - என்ற செந்திலந் துறையில் குடிகொண்ட குமரனையும் நினைவுபடுத்தி அக்கடல் துறையில் உள்ள மணலினும் பலவாக வாழ்க என்று இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை - மதுரை மருதனிள நாகனார் வாழ்த்துவார்.

" நீ நீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்
வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
நெடுவே ணிலைஇய காமர் வியன்துறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவாழ் எக்கர் மணலினும் பலவே " —புறம் - 55.

எல்லா மன்னர்களையும் இப்படியே வாழ்த்துவார்கள் என்று எதிர்பார்த்தால் ஏமாற்றம்தான்.

'இரவலர் புரவலர் நீயும் அல்லை' - என அஞ்சாமல் கூறிய புலவர்களும் உண்டு. 'யான் ஓர் வாணிகப் பரிசிலன் அல்லேன்! என்றறைந்தவர்களும் உண்டு.

" பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே "

—புறம் - 48.

என்று வன்பரணர் செம்மாந்து பேசும் காட்சியையும் இங்கே காணலாம். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் வீரத்தை ஆலூர் மூலங்கிழார் வெகு அழகாகக் காட்டுகிறார்.

கிள்ளிவளவன் சினந்து நோக்கும் திசையில் எரி தவழுமாம். நயந்து நோக்கும் வாய் பொன்பூத்துக் கொழிக்குமாம், செஞ்ஞாயிற்று மண்டிலத்தில் நிலவையும் - வெண்திங்களுக்குள் வெயிலையும் உண்டாக்க அவனால் முடியும் என்று புறம் முப்பத்தெட்டாம் பாட்டில் தெரிவிக்கிறார்.

வில்லாற்றலில் வல்லவன் ஓரி. வன்பரணர் ஒருகால் இதனைக் காண நேர்ந்தது. யானை ஒன்றைக் குறிவைத்த ஓரியின் அம்பு அருகிலே நின்ற வேங்கையை வீழ்த்தி - மானைச் சாய்த்து - பன்றியைப் புரட்டிவிட்டு - உடும்பு ஒன்றின் வயிற்றிலே சென்று தங்கியது. இத்தகைய ஆற்றலை 'வல்வில் வேட்டம்' என்று வன்பரணர் சிறப்பித்தார்.

" வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன் "

—புறம் - 152.

பாரியின் கொடையையும், பேகனின் வள்ளன்மையையும் சிறப்பித்த பாடல்கள் புறநானூற்றில் இடங்கொண்டுள்ளன.

" ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி "

என்று கபிலர் பெருமானும்,

"உடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்"

என்று பரணரும் பாடியுள்ளார்கள்.

பண்டைத் தமிழ் நாட்டின் குடிநிலை - வீரத்தின் விளைநிலமாக விளங்கியது. இதோ ஔவை காட்டும் ஓர் வீரம் விளையும் காட்சி.

கடல் கிளர்ந்தாற்போன்று இருபுறப் படைகளும் அணிவகுத்து நிற்கின்றன. வீரன் ஒருவன் படையைச் செலுத்திக் கொண்டே இடையில் புகுந்து விடுகிறான். வெந்து வாய் வடித்துக் கூரிதாக்கிய வேலைக் கையிலே கொண்டு வருபடை தடுத்து அமர்விளைக்கிறான். ஆயினும் இறுதியில் அந்த அமர்க் களத்திலேயே அவ்வீரனின் உடல் சிதைந்து விழுந்து விடுகிறது. சிலர் அவ்வீரனின் தாயிடம் செய்தி தெரிவிக்க அவளும் களம் வந்தாள். இடைப்படை அழுவத்தில் சிதைந்து வேறாகிய சிறப்புடையாளனின் மாண்பைக் கண்ணுறக் கண்டாள். ஓடாப் பூட்கை அவ்விடலையின் தாய்க்கு வாடுமுலை ஊறிச் சுரந்தன. என்னே பெருமிதம், இத்தாயின் வயிறல்லவோ வீரத்தின் விளைநிலம் என ஔவையார் வியந்தார். அதுதான் புறம் 295-ம் பாடலின் கருத்து.

அரசன் வீரர்களுக்குக் கள்ளை வழங்குவான். 'அரசே இதோ இந்த வீரனுக்கு முதலில் கள்ளை வழங்கு. உன் தந்தையின் தந்தைக்கு - இவன் தந்தையின் தந்தை போர் முகத்தில் உதவி செய்தான். போரில் பகைவர் படைக்கு எதிராக நின்று - தச்சனால் ஆர்க்காலைச் சேர்த்து எறியப்பட்ட குடம்போல - பகைவர் அம்புகளை எல்லாம் தானேற்று மாய்ந்தான்.

இவனும் மழையைத் தாங்கும் பனையோலைக் குடைபோல - உன்மேல் வரும் அம்பு மழையைத் தடுப்பான் என்று வீரம் விளம்பிய துறையும் காணப்படுகிறது.

"இவற்கீத் துண்மதி கள்ளே சினப்போர்
இனக்களிற் றியானை யியறேர்க் குருசில்
நுந்தை தந்தைக் கிவன்தந்தை தந்தை
எடுத்தெறி ஞாட்பி னிமையான் தச்சன்

அடுத்தெறி குறட்டி னின்று மாயந் தனனே
மறப்புகழ் நிறைந்த மைந்தினோ னிவனும்
உறைப்புழி யோலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே''

—ஔவையார் - 290

இவ்வாறாக அன்பும் பண்பும் இணைந்த தமிழர் குலம் புறத்திலும் அகத்திலும் அறவாழ்வு வாழ்ந்த வரலாற்றை - சங்க இலக்கியங்கள் தெள்ளென தெளிவு படுத்திக் காட்டுகின்றன. இந்திரன் அமிழ்தம் இயைவதாயினும்கூட தனித்துண்ணாப் பண்பு தமிழரின் பண்பு. தமிழையே அமுதாக. அமுதையே தமிழாகக் கொண்ட நற்றமிழர் குடியின் பெருமையை - புலமையை ஒல்லும் வகையால் கண்டோம். இதுபொழுது விடை பெறுவோம்.

(நிறைவுற்றது.)

" ஞானசம்பந்தம் "

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப்பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்.

உள்நாடு ரூ. 3—00. வெளிநாடு ரூ 4—00

செயலாளர்,
" ஞானசம்பந்தம் " காரியாலயம்.
தருமபுரம். மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்,



புதிதாகச் செய்து அணிவிக்கப்பெற்ற நவரத்தின அங்கியுடன்
வள்ளி தெய்வயானை சமேதராய் ஸ்ரீ செல்வமுத்துக்குமார
சுவாமி திருக்காட்சி வழங்குதல்,

தேவாரத்தில் நீராவி

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
திரு. செ. சிங்காரவேலன் M. A.. Dip. Ling

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கூக்குரல் இன்று நம் செவிகளில் எங்கெங்கும் விழுகிறது; இக்குரல் கேளாத இடம் எதுவும் இன்று இல்லை என்று கூடக் கூறிவிடலாம் என்று தோன்றுகிறது. வாழ்வதற்கென்றே இவ்வாழ்வு நமக்குக் கொடுக்கப்பட்டதுதான், ஆனால் பெரும்பாலோர் இதனை உணர்வதில்லை, எப்போதும் அழுத கண்ணும், சிந்திய மூக்குமாகப் பலர் உள்ளனர்; கவலைக் கடலில் வீழ்ந்து கண்ணீர் பெருக்குகின்றனர்; பிறர் ஆக்கம் கண்டு ஏங்குகின்றனர். பெற்றதைக்கொண்டு மன அமைதி அடையாமல், பெறாததை எண்ணி எண்ணி இளைக்கின்றனர். அதனால் மன அமைதி கெட்டு, வருந்துகின்றனர். பாரதி நடையில் இதனைக் கூறினால், 'கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து குமைகின்றனர், எப்போதும் குறை; எதிலும் குறை. இம் மனநிலையிலிருந்து விடுபடுவது எப்படி? இதிலிருந்து விடுபட வழியே இல்லையா? ஏன் இல்லை? இருக்கத்தான் செய்கிறது; ஒவ்வொருவரிடமும் இதற்கு - இக்கவலைப் பிணிக்கு - தக்க மாற்று இருக்கிறது; ஆம், அவரவர் நெஞ்சங்களிலேயே இருக்கிறது, அதனைப் பிரித்தெடுத்து வாழ்வில் அநுபவம் ஆக்கும் போது துன்பம், துயரம், பிணி முதலிய கவலைகள் இருக்கும் இடம் தெரியாமல் ஓடிப்போய் விடுகின்றன. வாழ்வின் சுவை புலப்படுகிறது; வாழும் நெறியும் விளங்குகிறது.

'குறைவிலோம் கொடு மானுட வாழ்க்கையால்' என்றும், 'சங்கிருக்கப் பெற்றேன்; என்ன குறை உடையேன்' என்றும் 'என்ன குறையும் இலோம்' என்றும், 'எங்கு எழில் என் ஞாயிறு' என்றும் கூறிய அப்பர், மணிவாசகர் அருள்மொழிகள் சிந்திக்கும்போது மிகத் தெளிவான உண்மைகள் அல்லவா? அவர்களைப் போன்ற அருளாளர்கள், இன்ப துன்பங்களைக்

சரிநிகர் சமானமாகக் கருதியவர்கள், இவ்வாறு வாழ்வின் பெற்றியை உணர்ந்து அமைதி கொண்டவர்கள்.

பனியும் குளிரும் நிறைந்த பல்லாயிரம் அடி உயரத்தில், மலைகள் சூழ்ந்த தனிப்பாதையில் மேடும், பள்ளமும் நிறைந்த குறுகிய வழியில் புரண்டும் உருண்டும், தத்தியும் தவழ்ந்தும் இறைவன் திருநாமம் ஒன்றையே பற்றியவராய்க் கயிலை யாத்திரை செய்த அப்பரடிகளது வாழ்வே இதற்குச் சான்று.

கொடுங்குளிரும் கடும் பனியும் அம்முதியவரை இடர்ப் படுத்த முடியவில்லை; மாருக 'இந்நிலையற்ற உடலைக்கொண்டு கயிலைநாயகனைக் காணுதுமீளமாட்டேன்' என்ற உறுதியையே இவை உண்டாக்கின. அப்பெருமானுர் கண்ட காட்சிகளில் எல்லாம் இறைவன் அருள் தோற்றமே; எங்கெங்கும் இறை யொளி மாட்சியே; இமாலயப் பெரும்பகுதியில் மழையும், வெயிலும், நீர்வீழ்ச்சிகளும், பனிச்சரிவுகளும் இயற்கை. திடீ ரென்று முகில்கள் கருத்துப் பெரு மழை பெய்யும்; மறுகணமே வானம் வெளிவாங்கிப் பகலவனது பேரொளி சுட்டெரிக்கும்; பனிப்படிவுகளில் கூடாரங்கள் மூழ்கி மறைதலும், அவற்றை அகழ்ந்தெடுத்துப் பயன்படுத்தலும் இமயப் பெருநெறியில் எப்போதும் இயல்பாகி விட்டவை. இப்பகுதியில் யாத்திரை மேற்கொண்ட அப்பரடிகள், சற்றேறக்குறைய ஆயிரத்துமுந் நூறு ஆண்டுகட்கு முன்னர் இந்த இயற்கையின் விளையாடல் களுக்கு உட்பட்டிருக்கக் கூடும்; அடிகள் அருளியுள்ள கயிலாயப் பதிகங்களில் இத்தகைய அநுபவங்களும், இறை யனுபவத்துடன் இணைந்து பிணைந்திருக்கக் கூடும் என்பது யாரும் மறுக்க வியலாத ஒன்ருகும்; ஆனல் இவ்வியற்கையின் விசித்திரங்கள், உரம்படைத்த நெஞ்சினராகிய இத்தமிழ் முனிவரை ஒன்றும் செய்ய முடியவில்லை; 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்று பாடியருளிய இவ் அருள் வீரருடைய கயிலைப் பதிகப் பாடற் பொருள் ஒன்று இங்கு நம் சிந்தனைக் குரியதாகின்றது.

உலகின் உயர்ந்த மலைச் சிகரத்தில் நிற்கும் அவர்க்கு எல்லா உலகங்களினும் மேம்பட்ட இறைவனது அளக்கவிய லாத நீள, அகல, உயரங்கள் நினைவிற்கு வருதல் இயல்பே யாகும்; எங்கு நோக்கினும் அவ்வருட் காட்சியே; அழல் எனப் பளபளக்கும் பனிபடர் சிகரங்கள் அவர் சிந்தனையில்

திருவண்ணாமலையாகத் தெளிவுறுதலும் இயல்பே யல்லவா? இவ்வாறு விரிந்து நிற்கும் அப்பரம்பொருள் தம் சிந்தையிற் புகுந்துள்ள பெற்றியாலன்றோ தமக்கு இவ்வியக்கம் வாய்த்தது என்றும் எண்ணி இறும்பூதெய்துகின்றார் அடிகள். அடிகளது உள்ளத்தை இமயப் பகுதிக் காட்சிகள் சில கவர்ந்திருக்க வேண்டும்; அவற்றையும் இறைவன் அருள் எனவே கருதிப் பாடுகின்றார் அடிகள் ;

"நீராவி யான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி! போற்றி!"

இவ்வரிகளில் 'நீராவி' பற்றி அடிகள் கூறியுள்ள கருத்து நம்மால் பெரிதும் சிந்திக்கத் தக்கதாகும்; இறைவனுடைய அருளாற்றலை விளக்க, நீராவியை விடப் பெரிதும் இயைந்த பொருள் உண்டோ? இமயப் பேராறுகளில் பகலவனது கடுஞ்சூடு பட்டு, அவ்வாறுத வெப்பத்தால் ஆவி புகைந் தெழுவதனை அடிகளுடைய திருக்கண்கள் கண்டன; அந்த ஆவி உயர்ந்து பரந்து எழுங்கால், நிழலிட்டுச் செல்லும் நேர்மையும் உடன்கண்ட அடிகள், அவ்விரண்டையும் தம் இயல்புக்கேற்ப இறைவனுடைய அருளாடல் என்றே புலப் படுத்துவாராயினர்; ஆதலின், 'நீராவியான நிழலே போற்றி!' என்று போற்றிப் புகழ்வாராயினர்.

இன்று நீராவியின் பெருமையை நாம் நன்கு உணர்ந் திருக்கிறோம்; நீராவி எஞ்சின்களின் உபயோகத்தால் இன்று நாம் பலன் அடைந்திருக்கிறோம். 'ஆற்றல் அழிவற்றது; ஒரு ஆற்றலை இன்னொரு ஆற்றலாக மாற்றலாம்' என்ற தத்து வத்தை இன்று இவற்றின் வாயிலாக அறிவியலார் கண்டறிந் துள்ளனர்; நிலக்கரியிலுள்ள ஆற்றல் பல நூற்றாண்டுகளாக அதனுள் சேமித்து வைக்கப்பட்டிருப்பதாகும்; அதிலுள்ள வெப்பச்சக்தியைக்கொண்டு நீரில் உள்ள வெப்பச்சக்தியை விளைத்தால், நீர் ஆவியாக மாறுகிறது; அந்நீராவி நீர் அடைத்துக் கொண்டிருந்ததைவிடப் பல மடங்கு அதிகமான இடத்தை அடைந்துக்கொள்ளும். ஆதலின் அந்நீராவியின் ஆற்றல் மிகுதியாகி விடுகிறது. 'நிலக்கரிச் சக்தி நீராவிச் சக்தி' யாக மாற்றப்படுவதனை இங்குக் காண்கின்றோம். இத னைத் தற்கால அறிவுலகு ஆராய்ந்து கண்டு பயன்படுத்தி

வருதலைக் காண்கிறோம், மேலை நாட்டில் இத்துறையிற் பன்னூறாண்டுகள் ஆராய்ந்து முடிவு போக்கியுள்ளனர் என்பதும் நாம் அறிந்ததே.

கிறித்து நாதர் பிறப்பதற்குமுன்பே, அலெக்சாந்திரியாவில் ஹீரோ என்பவர் நீராவியைப் பற்றிப் பயன்படுத்த ஆய்ந்தனர் என்பர், அதன்பிறகு, டெல்லா போர்ட்டா என்ற இத்தாலியர், சாவ்ரி என்ற இங்கிலாந்தவர், நியூக்கமன் என்பார், ஜேம்ஸ்வாட் என்பார் ஆகியோர், இந்நீராவியைக் கொண்டு இயந்திரங்களை இயக்குவது பற்றி ஆராய்ந்து முடிவு செய்தனர் என்பதை அறிவுலகு நன்கு அறியும். நாகரிக வாழ்விற்கு வேண்டிய எதனையும் கைகளால் செய்து பழகும் நிலை மெல்ல, மெல்ல இன்று மாறி இயந்திரங்களினால் வாழும்நிலை வந்துள்ளது; உலக வாணிகம், போக்குவரவு, பொருள்களின் படைப்பு ஆகிய அனைத்திலும் இன்று இயந்திரம் ஆட்சி செலுத்துகிறது; இயந்திரங்கட்கு அடிநிலை, ஆம், எல்லாம் வல்ல 'நீராவி யே ஆகும்.

ஒப்புமை சொல்லத்தக்க ஒருபொருளும் இல்லாதே தன்னில் தானே சிறந்துள்ள இறைவனுக்கு 'நீராவி' யை உவமை சொல்லும் பாங்கில் அமைந்துள்ள உட்கருத்து இன்று நாம் சிந்தித்துச் சிந்தித்து இன்புறுமாறு அமைந்துள்ளது; நீராவியின் ஆற்றலும், நிகரற்ற ஆற்றலாக, மதிக்கப்பட்டு விட்டது, ஆதலின் அப்பரடிகளது அருள் வாக்கு எவ்வளவு உண்மையாக உள்ளது என்று கருதிப்பார்த்தல் வேண்டும்.

"நீராவி யான நிழலே, போற்றி!
நேர்வார் ஒருவரையும் இல்லாய்போற்றி"

ஒவ்வொருவர்க்குள்ளேயும் இறைவன் ஒளிந்து கொண்டிருக்கின்றான்; 'ஆவி' யாக உள்ளான்; 'ரேசகம், பூரகம்' என்று கூறும் இரண்டு அமைப்பும் அவனே; என்னுளே உயிர்ப்பாய்ப், புறம்போந்து புக்கு என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே' என்று இனிக்கப் பாடுகின்றார் அப்பரடிகள், அந்த ஆவிக்குள் ஆவியை, உயிர்க்குள் உயிரை அறிந்து தொழிற்படுத்தியவர்கள் அருளாளர்கள்; ஆம், அவர்களும் ஒருவகையாகப் பார்த்தால், நிகரற்ற தெய்வீக நீராவியை இறையுயிர்ப்பை, ஒடுக்கி ஒளிகண்டவர்கள்தாம், அந்த ஆற்றல்,

ஒன்றை மற்ருென்ருக மாற்றும் ஆற்றல்; நிலக்கரி சக்தியை நீராவிச் சக்தியாக மாற்றிப் பயன் பெருக்கும் ஆற்றல் நீரின் வெப்பச்சக்தியையும் நீராவிச் சக்தியாக மாற்றிப் பயன்பெருக்கும் ஆற்றல் நமக்கும் வரவேண்டும்; சமய நெறி வல்லோர், 'சீவனைச் சிவனுக மாற்றுவது' என்று கூறுவதும் இங்கே நினைக்கத் தக்கதாகும்,

இவ்வாறு அப்பரடிகள் கண்ட கயிலை அநுபவம், நமக்கு அறிவியல் சிந்தனையை ஊட்டி உயிரியல் அநுபவத்திற்கு வழிவகுக்கின்றது என்ருல் அது மிகையன்று; 'நீராவியாக இறைவனை முதன் முதற் கண்டு போற்றிய அவ் அருளியற் கவிஞரது அருந்திருப் பாட்டின் அழகிய வடிவம் இதுவாகும்:

" ஊராகி நின்ற உலகே போற்றி!
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி!
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி!
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி!
நீராவி யான நிழலே போற்றி!
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி!
காராகி நின்ற முகிலே போற்றி!
கயிலை மலையானே போற்றி! போற்றி!"

[அப்பர் - 2640]

வேலூர், சித்த வைத்தியசாலை

சித்த மார்க்கத்தில் குறிப்பாக சித்த வைத்தியத்தில் பற்றுக் கொண்டவன் என்ற முறையில் ஸ்ரீ பாலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்தியநாதனைத் தரிசிக்க வந்திருந்த சமயத்தில், தருமையாதீனத்தின் கருணையால் விளங்கும் இலவச சித்த வைத்திய சாலையையும் அவர்களுடைய மூலிகைத் தோட்டத்தையும் கண்டேன். நான் போயிருந்த சமயம் வந்திருந்த நோயாளிகளிடம் டாக்டர் இராமகிருஷ்ணன் அவர்கள் காட்டிய அன்பையும் பரிவையும் கண்டு வியந்தேன். டாக்டர் அவர்களுடைய பண்பும், அடக்கமும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. இத்தகு பண்பு மிகு டாக்டருடனும், தருமையாதீனத்தின் ஆதரவில் சகல வசதிகளுடனும் இயங்கும் இந்த சித்தவைத்தியசாலை தமிழகத்துக்கே ஒரு தலைமை சித்த வைத்தியமிடமாகத் திகழும் தகுதியைப் பெற்றுள்ளது. தருமையாதீனத்தின் இந்த சீர்மிகு மக்கட்தொண்டு மேன்மேலும் வளர்ந்தோங்க ஸ்ரீ வைத்தியநாதனை வேண்டுகின்றேன்.

(Sd.) K. S. V. ரமணி,
19—3—67. உதவி ஆசிரியர், தினமணி, மதராஸ்.

வேளூர் தேவஸ்தானம் (வைத்தீசுவரன்கோயில்)

இலவச சித்த வைத்தியசாலை,

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

நீரிழிவு வராமல் இருப்பது நல்லது. அப்படி வந்துவிட்டால் உணவு கட்டுப்பாடு வைத்துக்கொண்டால் அதன் கொடுமைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். அதன் சார்பு நோய்களும் தோன்ருமல் இருக்க உதவும். உடல் நலத்திற்கும் உணவுக் கட்டுப்பாடு பெரிதும் பயன்படும். எந்த ஆகாரத்தைச் சாப்பிடுவது எதைச் சாப்பிடக்கூடாது என்ற விபரம் பொதுவாக நீரிழிவு நோயாளிகள் அறிந்திருப்பது நல்லது. கீரை வகைகளையும், காய்கறிகளையும், அதிகமாகப் புசிக்கலாம். அப்போதுதான் மலச்சிக்கலைத் தடுக்கமுடியும். உதாரணமாக முளைக்கீரை, அரைக்கீரை, ஆராக்கீரை, ஒரிலைத்தாமரை, வெந்தயக்கீரை, பொற்றலைக்கையாந்தகரை, பசலைக்கீரை, பொன்னுங்காணி, கலவைக்கீரை, இவைகள் மிகவும் சிறப்புடையன.

காய்கறிகளில் பிஞ்சு கத்தரிக்காய், வெண்டைக்காய், முருங்கக்காய், காலிபிளவர், வெள்ளரிக்காய். தக்காளிப்பழம், முட்டைக்கோஸ், அவரைக்காய், புடலங்காய், அத்திக்காய் முதலியவைகள் சாப்பிடலாம்.

பழவகைகளைப் பொருத்தமட்டில் பொதுவாக இனிப்பு கொடுக்கக்கூடிய பழவகைகள் நீரிழிவுக் காரர்களுக்கு ஆகாது, இருந்தாலும் ஒரு சில பழவகைகள் சாப்பிடலாம். தினம் எலுமிச்சம்பழ ரசமும், தேனும் கலந்து சாப்பிடலாம். நாவல் பழம், மாதுளம்பழம், விளாம்பழம், முதலியன சாப்பிடலாம். மற்றும் துவர்ப்பும், கசப்பும் கூடிய பழவகைகளைச் சாப்பிடலாம்.

மாமிச உணவைப் பொருத்தமட்டில் நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் பொதுவாக சைவ உணவே வைத்துக்கொள்வது சாலச் சிறந்ததாகும். கொழுப்புப் பொருட்களை அறவே நீக்கிவிடுவது நல்லது. தினம் வெந்தயக் கஞ்சி, கொள்ளுக் கஞ்சி, கோதுமைக் கஞ்சி, பாசிப்பயறுக்கஞ்சி, உளுத்தம்பருப்புக் கஞ்சி இப்படி மாற்றி மாற்றி கஞ்சி சாப்பிட்டால் ருசியாகவும் இருக்கும்: பித்த, கபவாதத்தையும் சமன் செய்யும், சிறு நீரகங்களுக்கு வலுவுண்டாக்கும்.

நீரிழிவுக்காரர்கள் அரைவயிறு ஆகாரம் உண்பது நல்லது. ஆடை நீக்கிய மோர் சாப்பிடுவது நல்லது.

நீரிழிவை மூலிகைகள் மூலம் ஓரளவு போக்கிக்கொள்ளலாம்.

(1) நூறு வருடம்சென்ற வேப்பம்வேர் பட்டை, அடிமரப் பட்டை, பூ. பிஞ்சு. துளிர், இவைகளைக் காயவைத்து இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு திரிகடி அளவு தினம் காலை, மாலை, உண்டு வரலாம்.

(2) ஆவாரை வேர் பட்டை, பூ, விதை, இலை, இவைகளை மேற் சொன்னபடி செய்து சாப்பிட்டு வரலாம்.

(5) நூறுவருடம் சென்ற வன்னி பட்டை, இலை இவைகளை இடித்து வைத்துக்கொண்டு எருமைத்தயிரில் கலந்து தினம் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவந்தால் நீரிழிவு நோய் நீங்கும்.

(1) வெள்வேலன் பூ, காய், இலை இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து தினம் வெறுகடி வீதம் சாப்பிட நீரிழிவு நீங்கும்.

(5) சிறுகுறிஞ்சான் (சர்க்கரைக் கொல்லி) சமூலம் எடுத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து தினம் எலுமிச்சம்பழச் சாற்றில் சாப்பிட்டு வந்தால் விடாத் தாகம், இருமல் முதலியன போகும்.

(6) ஓரிலைத்தாமரை, வல்லாரை, இவைகளை உலர்த்தி இடித்து, சம அளவு எள்ளு இடித்த சூரணம் கலந்து வைத்துக் கொண்டு சாப்பிடலாம்.

(7) வறுத்து இடித்த சாம அரிசி மாவுடன் நாள்பட்ட வேப்பமரத்திலிருந்து எடுக்கப்பட்ட பிசினைக் காயவைத்து பொடிசெய்து மேற்படி அரிசிமாவுடன் கலந்து திரிகடி அளவு உண்டுவந்தால் நீரிழிவு அறவே நீங்கும்.

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்." — குறள்.

மற்றும் அவரவர்கள் யுக்திக்கும் சரீர பாகுபாட்டிற்கும் தகுந்தாற் போல் தமிழ் மூலிகைகளைச் சாப்பிட்டு நோயினின்று விடுதலைப் பெற்று நூறாண்டு வாழப் பிரார்த்திக்கின்றேன்.

இம்மாதம் வைத்தியசாலைக்கு வந்த நோயாளிகள் விபரம்:—

ஆண்கள்	1132
பெண்கள்	1041
குழந்தைகள்	812
மொத்தம்	2985

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
காசி யாத்திரை

சி. அ.

[மலர் 26 இதழ் 5 பக்கம் 291ன் தொடர்ச்சி]

ஸ்ரீ காசிவிசுவநாத சுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடந்த அந்தச் சோமவாரத்தின் இரவு அர்த்தசாம பூஜைக்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள், ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளுடன் எழுந்தருளினார்கள். அர்த்தசாம காலத்தில் பண்டாக்களைத் தவிர மற்றவர்களை மூலத்தானத்தில் அனுமதிப்பதில்லை. எனினும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களையும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளையும் பண்டாக்கள் வரவேற்று ஸ்ரீவிசுவநாதசுவாமி அருகில் ஆசனம் கொடுத்து அமர்ந்தருளச் செய்தார்கள். மிகச் சிறப்பாக நடைபெற்ற அபிஷேக அலங்கார தீபாராதனைகளைக் கண்டு களிக்கும் பேறு அனைவர்க்கும் வாய்த்தது. இவ்வர்த்த சாமபூஜையில் ஸ்ரீவிசுவநாதசுவாமியை மற்றும் பல நாட்களில் சென்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தரிசனம் செய்தருளினார்கள்.

காசியில் சைலபுத்ரி, பிரமசாரிணி, சந்திரகண்டா கூஷ்மாண்டா, ஸ்கந்தமாதா, காத்யாயனி, காளராத்ரி, மகாகௌரி, சித்தாத்ரி என்னும் நவதுர்க்கா தேவிகள் வேறு வேறிடங்களில் கோயில்கொண்டு அன்பர்கட்கு அருள் வழங்குகிறார்கள். சந்திரகண்டா தேவியை, 'சித்ரகண்டா தேவி' என்றும், சித்தாத்ரீ தேவியை, 'சித்திமாதா' என்றும் அங்குள்ளவர்கள் வழங்குகிறார்கள்.

4—4—67 செவ்வாய்க்கிழமையன்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இவ்வொன்பது கோயில்களுக்கும் எழுந்தருளி நவதுர்க்கா தேவிகளையும் தரிசனம் செய்தருளினார்கள். அன்று இரவு ஸ்ரீ காலபைரவர் தரிசனம் நிகழ்ந்தது. 5—4—67 புதன் கிழமையன்று புத்தர் முதல்உபதேசம் செய்த இடமாய், உயர்ந்த பௌத்தத் தூபியும், ஜப்பான், சீனதேசத்தவர்கள் வந்து கட்டிய அழகிய பௌத்த ஆலயங்களும், மகாபோதி விருட்சமும், புத்தரது வரலாற்றுத் தொடர்பான பழம்பெருஞ் சிற்பங்களும், அசோகனது சிம்ம ஸ்தூபி முதலியனவும் வைக்கப்பட்டுள்ள தொல்பொருள் காட்சிசாலையும் உள்ள 'சாரநாத்' என்னும்

இடத்திற்கும், ராம் நகரில் உள்ள துர்க்காதேவி தரிசனத்திற்கும் எழுந்தருளினார்கள்.

6—4—67 தேதியன்று குருவாரம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்கு மௌனவிரத நாளாய் இருந்தது. அன்று ஸ்ரீ கேதாரநாதசுவாமி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்களுடன் விசேஷ அபிஷேக ஆராதனைகளை நடத்தினார்கள்.

7—4—67 வெள்ளிக்கிழமை காலை ஸ்ரீ அன்னபூரணி ஆலயத்தில், சுவாசினி, குமாரி வடு பூஜைகள் நடத்தப்பட்டன. இதில் ஒன்பது குத்து விளக்குக்கள் ஏற்றிவைத்து, சுவாசினிகளாகிய ஒன்பது சுமங்கலிகள், குமாரிகளாகிய ஒன்பது இளங்கன்னிகைகள், வடுக்களாகிய ஒன்பது இளம் பிரமசாரிகள் ஆகியோர்களுக்கு வஸ்திரதானம் முதலியவைகளை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளினார்கள்.

பின்பு ஸ்ரீ அன்னபூரணியம்மைக்கு ஸ்ரீ விசுவநாதசுவாமிக்குப் போலவே, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளுடன் விசேஷ அபிஷேக ஆராதனைகளைச் செய்தருளினார்கள். ஸ்ரீ விசுவநாதர் ஆலயத்திற்போல ஸ்ரீ அன்னபூரணி ஆலயத்தின் கர்ப்பக்கிருகத்துக்குள் மற்றவர்களை அனுமதிக்கும் வழக்கம் இல்லை. ஆயினும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்களும் ஸ்ரீ அன்னபூரணியம்மைக்குத் தாங்களே அபிஷேக ஆராதனைகளைச் செய்தருளினார்கள். ஆராதனை பிரசாதம் அன்பர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

ஸ்ரீ அன்னபூரணியம்மை அபிஷேக ஆராதனையை முடித்து எழுந்தருளிய உடன் ஸ்ரீ குமாரசுவாமி மடத்தில், பண்டாரா மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றது. பண்டாரா என்பது, காசியில் உள்ள சாதுக்களுக்குச் செய்யும் மாகேசுர பூஜைக்குப் பெயர். பண்டாராவில் நம் நாட்டிற்போல அன்னம் முதலியன அளிக்கப்படாது. முற்றிலும் இனிப்புப் பண்டங்களே அளிக்கப்படுதல் குறிப்பிடத்தக்கது. நூற்றெட்டுக்கும் மேற்பட்ட சாதுக்களுக்கு முதற்கண் காவி வஸ்திரங்களை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அளித்தருளினார்கள். பின்பு உணவு பரிமாறப்பட்டது. இலட்டு, ஜிலேபி, பூரிக்கிழங்கு, கச்சோடி, கீர், பாயசம் என்னும் இவையே வேண்டுமளவு பரிமாறப்பட்டன. தக்ஷிணை ரூபாய் ஒவ்வொன்றையும் முறைப்படி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளினார்கள். திருமடம் நிறையச் சாதுக்கள் அமர்ந்து வடமொழி ஸ்தோத்திரங்களைச் சொல்ல ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் செய்த ஆராதனையுடன் அமுதளித்த

காட்சி கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது. அன்று இரவு ஸ்ரீ அன்னபூரணி ஆலயத்தில் நவசக்தி அர்ச்சனையாக, ஸ்ரீ மகாலலிதா சகஸ்ரநாமார்ச்சனை நடைபெற்றது.

9—4—67 ஞாயிறு காலை காசியினின்றும் திரும்புவது என்பது திட்டம். ஆகையால், 8—4—67 சனிக்கிழமையன்று ஆதீனத் தொண்டர் அனைவரும் காசியில் அவரவர்களுக்கு விருப்பமான இடங்களுக்குச் சென்றுவருதல் முதலியவைகளை முடித்துக்கொள்ளும்படி உத்தரவாயிற்று அதன்படி அவரவர்கள் தங்கள் விருப்பப்படி காசி நகரத்தில் பல இடங்களுக்கும் சென்று வந்தார்கள்.

காசியில் இத்தகைய யாத்திரைச் சிறப்புக்கள் எல்லாம் செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள், இவற்றிற்கிடையே ஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்களுடன், காசிப் பல்கலைக் கழகம், பிர்லா மந்திர், துளசி மானச மந்திர் முதலிய இடங்களுக்கும் எழுந்தருளிப் பார்வையிட்டருளினார்கள்.

ஸ்ரீ பண்டித மாளவியா அவர்களது நினைத்தற்கரிய பெரு முயற்சியால் அமைந்துள்ள 'காசிப் பல்கலைக் கழகம் பத்துக் கல் பரப்புடையது. உலகில் எத்தனை வகையான கல்லூரிகள் உண்டோ அத்தனை வகையான கல்லூரிகளும் காசிப் பல்கலைக் கழகத்தினுள் அமைந்திருப்பது, பார்ப்பவர் மனத்தைப் பிரமிக்கச் செய்யும். கலைக்கல்லூரி, மருத்துவக்கல்லூரி, அறிவியற் கல்லூரி. விவசாயக் கல்லூரி, சட்டக்கல்லூரி என்று இப்படிப் பல கல்லூரிகளும் இப் பல்கலைக் கழகத்தின் சுற்று மதிலுக்குள்ளே இருக்கின்றன. ஒவ்வொரு கல்லூரிக்கும் கற்கும் இடம், விளையாடுமிடம், ஆய்வுக்கூடம், மாணவர் தங்கும் விடுதி முதலிய பலவும் தனித்தனியே அமைந்து, ஒவ்வொரு கல்லூரியும் ஒன்றுக்கொன்று தொடர்பின்றித் தனித்தனி ஊர்போலக் காட்சியளிக்கின்றன. இவற்றின் நடுவில் அமைந்தது பிர்லா மந்திர், இது, ஸ்ரீ மாளவியா அவர்களது வேண்டுகோளுக்கிணங்க திரு. பிர்லா அவர்களால் பல லட்சக்கணக்கான பணச்செலவில் முழுதும் சலவைக் கற்களால் கட்டப்பட்ட ஸ்ரீ காசி விசுவநாத சுவாமி கோயிலாகும் இதில் நம் தென்னாட்டுக் கோயில் முறைகளையும் காணலாம்.

ஸ்ரீ துளசி மானச மந்திர் என்பது, கல்கத்தாவில் வாழ்ந்த கோடீசுவரர் தமது அறநிலையமாகப் பிர்லாமந்திரைக் காட்டிலும் பெரும் பணச்செலவில் கட்டிய, முற்றிலும் சலவைக் கற்களால் ஆகிய ஸ்ரீ துளசிதாசரது கோயிலாகும். இதில் குறிப்பிடத் தக்கது, இந்தி மொழியில் அமைந்த ஸ்ரீ துளசிதாச ராமாயணம் பாலகாண்டம் முதல் பட்டாபிஷேகம் வரையிலும் பெருஞ்

செலவில், பெரிதும் முயன்று சலவைக் கல்லில் மிக அழகாகப் பொறித்து வைத்திருப்பதேயாகும். இதைக் கண்டவுடன் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளவர்களும் 'நம் சேக்கிழார் பெருமானுக்குச் சிதம்பரத்தில் இத்தகைய பெருங்கோயில் ஒன்று அமைத்து, அதில் அவர் அருளிச்செய்த பெரியபுராணம் முழுவதையும் சலவைக் கல்லில் பொறித்து வைத்தால் என்ன என்று ஆர்வத்துடன் கூறியருளினார்கள். காசியிலும், மற்றும் பல இடங்களிலும் கனக மழையைச் சொரிந்து வரும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கும், காசிமுதல் குமரிவரையில் அறக்கட்டளைகள் பலவற்றை அமைத்துவரும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளவர்களுக்கும் இந்த மாபெரும் கருத்தையும் செயற்படுத்தல் இயலாத ஒன்றல்ல.

இத்துணைப் பெருஞ்சிறப்புக்களுடன் காசியாத்திரையை முடித்தருளிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் 9—4—67 ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீ குமாரசுவாமி மடத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ காலபைரவமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளைச் செய்வித்து அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கித் திருவமுது கொண்டருளிய பின்பு, ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் வணங்கி வாழ்த்தி வழியனுப்பப் பரிவாரங்களுடன் தருமைக்கு எழுந்தருளினார்கள்.

பகல் $11\frac{1}{2}$ மணிக்கு வாரணாசியிலிருந்து, புறப்பட்ட புகைவண்டியில், அங்குப் பத்துப் பன்னிரண்டு நாட்களாக இருந்த தங்கள் சமசீதோஷ்ண வண்டியில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் முன்போலவே மூன்றுநாட்கள் பிரயாணம் செய்து 11—4—67 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்குச் சென்னையில் உள்ள தங்கள் சமயப் பிரசார நிலையத்திற்கு எழுந்தருளினார்கள். அங்கு மாலை வழிபாடுகளை முடித்துக்கொண்ட பிறகு உடனே, உந்துவண்டியில் பிரயாணம் செய்து, இரவு 2 மணிக்கே தங்கள் ஆதீனத்தில் அடியார்கள் எதிர்கொண்டு வணங்கத் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். அடுத்த இரண்டொரு நாட்களிலிருந்து ஸ்ரீ வைத்தீசுவரன்கோயில் கார்த்திகை, சீகாழித் திருமுலைப்பால் உற்சவம், திருக்கடவூர்க் காலசம்மார விழா, சப்தஸ்தான யாத்திரை முதலியவைகளை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நடத்தியருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது திருவுளக்கருணையால் அடியேனுக்கும் காசியாத்திரைப் பேறு கிடைத்ததுடன், அவர்களது யாத்திரைச் சிறப்பையும், விசேஷ அபிஷேக ஆராதனைகளின் ஈடுபாடும், சாதுக்கள் முதலானவர்களுக்கு வஸ்திரமும் பிறவும் வாரி வழங்கும் வள்ளன்மையையும் நேரில் கண்டுகளிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. வாழ்க கயிலைக் குருமணியவர்கள்.

வாழ்க கயிலைக் குருமணியவர்கள் அருட்செங்கோல்!

செய்திகள்

தருமையாதீனத்தில்
ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா

நிகழும் பிலவங்க ஆண்டு சித்திரைத்திங்கள் 20 ஆம் நாள் (3—5—'67) புதன்கிழமை சமயாசாரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனுர் திருநக்ஷத்திரமாகிய சதயத் திருநாளாதலின், ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்கு காலையில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. மாலையில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு சொ. சிங்காரவேலனுர் M. A., Dip. Ling. "அப்பரும் சம்பந்தரும்" என்ற தலைப்பிலும், திருநெறிச்செம்மல், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் "அப்பரும் உழவாரப் பணியும்" என்ற தலைப்பிலும், வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசனுர் "அப்பர் அருந்தமிழ்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினுர்கள். பின்னர் திருமுறைப் பாராயணமும், சிவிகையில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருவீதியுலாவும் நிகழ்ந்தன. திருவீதியுலாவில் ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், பேராசிரியர்களால் அற்புத விளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அவ்வப்பொழுது அற்புதப் பதிகப் பாடல்கள் பண்ணிசையுடன் பண்ணிசைவாணர்களால் பாடப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கியருளினுர்கள்.

ஞானபீடமேறிய சுபதினம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஞானபீடமேறிய சுபதினம் 3—5—'67 புதன்கிழமை. அன்று ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில், ஸ்ரீ தருமபுரீசுவர சுவாமி திருக்கோயில், ஸ்ரீ அஷ்டா தசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயில்

களில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சிறப்பு வழிபா டாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் முதலியன வழங்கியருளி னூர்கள்.

அன்று 108 சிவாசாரியப் பெருமக்களுக்கு புத்தாடைகள் வழங்கி, பிராம்மண போஜனமும் சிறந்த முறையில் செய்து வைக்கப்பட்டது. சிவாசாரியப் பெருமக்கள் பல ஊர்களிலிருந் தும் வந்திருந்தனர். அவர்கள் காலை முதல் ஸ்ரீ துர்க்காம்பிகை சந்நிதியில் ஸ்ரீ சூக்த அகண்ட பாராயணம் நிகழ்த்தினூர்கள்.

சித்திராபௌர்ணமைச் சிறப்பு விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் 24—4—'67 திங்கட்கிழமை சித்திராபௌர்ணமியை முன்னிட்டு, ஸ்ரீ ஆனந்த பரவசர் பூங்காவில் திருக்கோயில் கொண்டு அருள் வழங்கும் ஸ்ரீ வனதுர்க்கா தேவிக்குக் காலையிலும், ஸ்ரீ தருமபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ ஆறுமுகப் பெருமானுக்கும், ஸ்ரீ அஷ்டா தசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக் கும் மாலையிலும், அன்பர்களால் காவடிகள் எடுக்கப்பெற்றன அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. அன்பர்கள் பலர் வந்து வழிபட்டுய்ந்தனர்.

சித்திரைத்திங்கட் பெருவிழா

சீகாழியில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட் பெருவிழா 15—4—'67 சனிக்கிழமை முதல் தொடங்கி 24—4—'67 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 16—4—'67 ஞாயிற்றுக்கிழமை திருஞானசம்பந்தருக்குப் பெருமான் ஞானப்பால் அளித்த திருநாள். அன்று காலை 9 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானம் அவர்கள் திருஞானசம்பந்தர் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினூர்கள். திருஞானசம்பந்தருக்குப் புதிதாகச் செய்யப்பெற்ற மகரகண்டிகை அணிவிக்கப்பெற்றது. பின்னர் ஞானசம்பந்தர் புறப்பாடாகி திருக்கோயில் வலமாக பிரம தீர்த்தக் கரைக்கு எழுந்தருளியாயிற்று. அப்பொழுது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சம்பந்தர் அற்புத வரலாற்று விளக்கவுரையைத் தொடங்கிவைத்தருளி, ஆச்சாள்

புரம் திரு. M. சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கு "திருமுறைக் கலாநிதி" என்ற சிறப்புப் பட்டம் வழங்கி ஆசியருளினார்கள். அமுதமொழிக்கொண்டல், திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்கள் "தோடுடைய செவியன்" என்ற பதிகம் பாடிய அற்புத வரலாற்று நிகழ்ச்சியை விளக்கி விரிவுரையாற்றினார்கள். பின்னர், வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், மகாவித்துவான். திரு. சி. அருணை வடிவேல் முதலியார், செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு சொ. சிங்காரவேலனார் M. A., Dip., Ling. வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் முதலியவர்கள் அற்புத விளக்கவுரையாற்றினார்கள். திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை போர்த்தி ஆசியருளினார்கள். பின்னர் திருமுலைப்பால் வழங்கும் காட்சி பகல் 12 மணி அளவில் நிகழ்ந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திருமுலைப்பால் விழாக் காட்சியைக் கண்டு களித்தனர்.

இவ்விழாவை முன்னிட்டு 15—4—'67 முதல் 19—4—'67 முடிய உள்ள நாட்களில் மாலையில் திருஞானசம்பந்தர் புராண விரிவுரையை அமுதமொழிக்கொண்டல், திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்கள் நிகழ்த்தினார்கள். 20—4—'67 வியாழக்கிழமை திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றது. அன்று திருமுறைகளை யானைமீது ஒப்பனை செய்து பண்ணிசைவாணர்களின் திருமுறைப்பாராயணத்தொடு திருவீதியுலா நிகழ்த்தப்பெற்றது. தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

திருக்கடவூரில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கட் பெருவிழா 15—4—'67 சனிக்கிழமைமுதல் தொடங்கி நடைபெற்றது. சிறப்பு நிகழ்ச்சியாக 17—4—'67 அன்று திருக்கல்யாணமும், 19—4—'67 அன்று ரிஷபவாகனக் காட்சியும், 20—4—'67 அன்று காலசம்கார சேவையும், 22—4—'67 அன்று திருத்தேர்த் திருவிழாவும் நடைபெற்றன. காலசம்காரத்திருநாளன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி காலசம்காரத் தரிசனமும் செய்தருளினார்கள். அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. காலசம்காரத் தரிசனத்திற்குப் பல ஊர்களிலிருந்து அன்பர்கள் பலர் வந்து வழிபட்டுய்ந்தனர்.

திருவையாற்றில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 15—4—'67 சனிக்கிழமை யன்று சித்திரைத்திங்கட் பெருவிழா தொடங்கப்பெற்றது. 19—4—'67 அன்று தன்னைத்தான் பூசித்தல் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளும், 21—4—'67 அன்று கோரதக் காட்சியும், 23—4—'67 அன்று திருத்தேர்க் காட்சியும் நடைபெற்றன. 26—4—'67 அன்று சப்தஸ்தான பிரதக்ஷிணம் சிறப்பாக நிகழ்ந்தது. அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். ஏழு தலங்களுக்கும் அன்பர்கள் உடன்சென்று வழிபட்ட காட்சி மக்களின் தெய்வ நம்பிக்கையை விளக்கிற்று. விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

21—4—'67 வெள்ளிக்கிழமை பூம்புகார் கீழ்த்திசைப் பண்பாட்டுக் கல்லூரி முதல்வர், திரு. சி. இராமலிங்கம் M. A., "தத்துவாதீதன்" என்ற தலைப்பிலும், 22—4—'67 சனிக்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், செஞ்சொற் கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனார் M. A., Dip. Ling. "அழுவார்க்கு அமுதங்கள் காண்க" என்ற தலைப்பிலும், 24—4—'67 திங்கட்கிழமை சென்னை, 'திருக்கோயில்' ஆசிரியர், திரு. ந. ரா. முருகவேள் M. A , M. O. L., "ஐயாறதனிற் சைவன்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். 25—4—'67 செவ்வாய்க்கிழமை நாகப்பட்டினம் தேசீய உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான். திரு. வை. மு. சண்முகதேசிகர் "திருஞானசம்பந்தர்" வரலாற்றைத் தக்க பக்கவாத்தியங்களுடன் கதாகாலட்சேபம் செய்தார்கள்.

சீகாழியில் :-

ஸ்ரீ சட்டைநாதர் வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீசட்டைநாதருக்கு 12-வது ஆண்டு சிறப்பு வழிபாடு 5—5—1967 வெள்ளிக்கிழமையன்று மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. ஸ்ரீ முத்துச் சட்டைநாதருக்குக் காலையில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. மாலை 7 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி முறையாக வழிபாடாற்றியபின்னர் ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் புறப்பாடாயிற்று.

மலைக்கோயிலில் ஸ்ரீ சட்டைநாதர் புழுகுகாப்பு தரிசனமும் சிறந்த முறையில் நடைபெற்றது. அன்பர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள். மாலை 6 மணி அளவில் ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் திரு. சொ. சிங்காரவேலனார், எம். ஏ., ஆபதுத்தாரணார் மாலை என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள்.

வடதிருமுல்லைவாயில் திருப்பணித் தொடக்க விழா

தொண்டைமான் சக்கரவர்த்தியைத் தடுத்தாட்கொண்ட சிறப்புடையது வடதிருமுல்லைவாயில். சங்கிலியாரைப் பிரிந்து திருவொற்றியூரை நீங்கியவுடன் கண்ணொளி யிழந்த சுந்தரர் மனம் கரைந்து உருகிப் பாடியருளிய திருப்பதிகம் பெற்றது. இறைவன் ஸ்ரீ மாசிலாமணியீசுவரர். இறைவி ஸ்ரீ கொடியிடை நாயகி. இவ்வாலயம் மிகத் தொன்மைவாய்ந்தது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இரு எருக்கந் தூண்கள் அர்த்த மண்டபத்தில் உள்ளன. விமானம் கஜப்பிரஷ்ட விமானம். சென்னை ஆவடிக்கு அருகில் உள்ள இப்புராதன ஆலயம் திருப்பணிசெய்யவேண்டிய நிலையில் இருப்பதை அறிந்து தமிழ்நாடு தெய்விகப்பேரவையின் ஆலயத் திருப்பணித் திட்டத்தின்கீழ் இவ்வாலயத்திருப்பணியை 30—4—'67 ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணி அளவில் தமிழ் நாடு தெய்விகப் பேரவைத் தலைவர், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கரத்தால் தொடங்கி வைத்தருளினார்கள்.

திருப்பணி சிறப்பாக நடைபெறவேண்டி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் முதல்நாள் மாலையே மேற்படி ஆலயத்திற்கு எழுந்தருளி சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய "திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்கு உன் சீருடைக் கழல்கள்" என்ற திருப்பதிகத்தை ஓதுவாமூர்த்திகள் பதினொரு முறை ஓத, சிவாசாரியர்கள் வில்வார்ச்சனை புரிய திருமுறை அர்ச்சனை செய்து சிறப்பு வழிபாடு நிகழ்த்தினார்கள். தொடக்க விழாவன்று காலையில் திருமுறை அருச்சனையும், ஸ்ரீ கொடியிடை அம்மைக்கு சகஸ்ர நாம அர்ச்சனையும், அபிராமி அந்தாதி அருச்சனையும் நிகழ்த்தி திருப்பணி தொடங்கப்பெற்றது. தொடக்க விழாவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஊர் செழிப்பதற்கு ஆலயம் செம்மையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த ஆலயம் தொண்டைமான் சக்கரவர்த்திக்கு அருள் பாலித்த சிறப்புடையது. வரலாற்றுச் சிறப்பும், புராண

பிரசித்தியும் பெற்ற பெருமையுடையது. என்றும் நல்லவர் பரவும் திருமுல்லைவாயில் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிறப்பித்திருக்கின்றார்கள். இவ்வாலயத் திருப்பணிக்குத் தமிழ்நாடு தெய்விகப் பேரவை இந்தப் பசலிக்கு ரூ. 5000 நன்கொடை வழங்க அனுமதித்திருக்கிறது. அடுத்த ஆண்டில் ரூ. 25000 வழங்கலாம் என்றும், அரசாங்க அறநிலைய இலாகாவும் கணிசமான தொகை உதவி செய்யும் என்றும் கருதுகிறோம். ஒருலக்ஷ ரூபாய் வரை திருப்பணி செய்யவேண்டிய இவ்வாலயத்திற்கு, அருகிலுள்ள தொழில் நிறுவனங்கள் பலவும் பேருதவி செய்தால் லக்ஷக்கணக்கான மக்கள் முன்னிலையில் கும்பாபிஷேகம் நிறைவேறும். இதற்கு எல்லாம்வல்ல சொக்கேசன் திருவருள் பாலிப்பாராக என்றும், தருமையாதீனச் சார்பில் ரூ. 10000 நன்கொடை வழங்குவதாகவும் திருவுளம் இசைந்து ஆசியருளினார்கள். தமிழ்நாடு தெய்விகப் பேரவைச் செயலர், திரு. A. சிதம்பரம் B.A.,B.L., அவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றார்கள். அறநிலைய ஆணையர், திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., அவர்களும், தஞ்சைத் துணை ஆணையர், திரு. A. மார்க்கண்டவேல்ராசன் அவர்களும் கலந்துகொண்டு திருப்பணியை ஆதரித்துச் சிறப்புரையாற்றினார்கள். ஆலயச் சார்பிலும், தெய்விகப் பேரவை சார்பிலும், ஆதீனச் சார்பிலும் அடியார்களுக்கு காலை சிற்றுண்டியாக பிரசாதங்கள் வழங்கப் பெற்றன. இவ் விழாவையொட்டி வடதிருமுல்லைவாயில் திருப்பதிகம் குறிப்புரையுடன் ஆதீன வெளியீடாக வெளியிட்டு வழங்கப்பட்டது.

சென்னை சமயப் பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவின்
எட்டாவதாண்டு நிறைவு விழா

30—4—67 காலை 7 மணிமுதல் 10 மணிவரை, சென்னைக்கு அண்மையிலுள்ள வடதிருமுல்லைவாயில் ஆலயத்தில், சென்னை சமயப்பிரசார நிலைய வழிபாட்டுக்குழுக எட்டாவதாண்டு நிறைவு விழாவும், வழிபாடும் நடைபெற்றன. வழிபாட்டுக் குழுவினர் வடதிருமுல்லைவாயில் திருப்பதிகம் ஓதி முறையாக வழிபாடு நிகழ்த்தினர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் முன்னிலையில் வழிபாட்டுக்குழு எட்டாண்டுகளாகச் செய்துவரும் தொண்டுகளைப்பற்றி ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் விரிவுரையாற்றி, "தில்லைவனம், காசி, திருவாரூர், மாயூரம், முல்லைவனம்" எனவரும் சிவபோகசாரப் பாடலில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் இத்தலத்தின் பெயரைச் சொன்னாலேயே முத்தி கிடைக்கும் என்று கூறியுள்ளதையும் குறிப்பிட்டார்கள்.

எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(பிலவங்கஹு வைகாசிமீ 1உ முதல் 31உ முடிய)

(15—5—67 முதல் 14—6—67 முடிய)

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி 4 பாதங்களும் அதிக செலவினங்களைக் கொடுக்கும். சுபசோபனாதிகள் நடைபெறும். பரணி 4 பாதங்களும் கார்த்திகை முதல் பாதமும் ஜெயம் தரும். ஜீவனம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கச்செய்யும். தூரத்திலிருந்து வாழ்த்துப் பத்திரங்கள் கிடைக்கும். சனி, புதன் சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் நல்ல சுபபலனைத்தரும். சகல காரியங்களும் வெற்றி அடையச்செய்யும். தெய்வசக்தி பிரகாசிக்கும். நூதனமான தொழில் ஆரம்பமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலனைத்தரும். இடமாறி லாபம் உண்டுபண்ணும். இல்லறம் ஓங்கும். புத்திராதிகளால் சுகம் உண்டாகும். சகல காரியங்களும் ஜெயமடையும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி பூராவும் மிஸ்ர பலனைத்தரும். சொல்ப நஷ்டம் உண்டுபண்ணும். ஆரோக்யக்குறைவு காட்டும். வீண் செலவுகளும் மனஸ்தாபமும் உண்டுபண்ணும். குடும்பத்தொல்லை ஜாஸ்தியாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் 4 பாதம் தவிர மற்ற பாதங்கள் சுபமிராது. வீண் அலைச்சல்களும் நஷ்டங்களும் மனஸ்தாபங்களும் உண்டுபண்ணும். சதா தெய்வ பலத்தையே நாடினவர்கள் சுகமடைவார்கள் திங்கள், புதன் சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் மகா சாம்ராஜ்ய யோகத்தைத் தரும். தெய்வபலம் ஓங்கும். மகா கீர்த்திபத்திரங்களும் சுப வசனங்களும் வந்துகொண்டே இருக்கும். இல்லற சுகமும் பந்துமித்திர கல்யாண வைபவங்களும் நடக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி பலன் மிஸ்ரமாகவே நடக்கச்செய்யும். வரவு செலவு சமனாகும். வீண் அலைச்சல்களும் மனஸ்தாபங்களும் உண்டுபண்ணும் ஆரோக்யக் குறைவால் இல்லறம் நடத்த முடியாமல் சிரமப்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விருச்சிகம் 9 பாதங்களும் மேலான இல்லற சுகங்களையும் உத்தியோக சுகங்களையுந் தந்து சந்தோஷம் உண்டுபண்ணும். எங்கும் கீர்த்தி ஏற்படச்செய்யும். தீராத நோய் தீரும். நஷ்டமான பொருள்கள் தானாக வந்துசேரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் மிஸ்ர பலனைத்தரும். ஆரோக்கியக் குறைவால் வைத்தியச்செலவு அதிகமாகும். சதா அலைச்சல்களும் இல்லறத் தொல்லைகளும் இருந்துகொண்டே இருக்கும். மாதாந்தரத்தில் எல்லாம் வெற்றி அடையும். சுபம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் ராஜாங்கத்தால் எதிர்பார்த்த சகல காரியங்களும் கைகூடும். மேலோர் பெரியோர்களுடைய அன்பினலும் தெய்வ பலத்தாலும் அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். வம்சவிருத்தி ஏற்படும். உத்தியோகத்தில் உயர்பதவி கிடைக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½. சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி மிஸ்ரபலனைத்தரும். இடம் மாறலும் அதிகச் செலவினங்களும் ஆரோக்யக் குறைவும் உண்டுபண்ணும். குடும்பத்தொல்லையால் பலவிதமான சிரமங்கள் காட்டும். தெய்வ பலத்தையே நாடினவர்கள், சகல துக்கங்களையும் ஜெயித்து சுபமடைவார்கள். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ½ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் பெரிய ராஜயோகங்களையும் தந்து சிரமபலன்களையும் உண்டுபண்ணும். வீண் அலைச்சல்களும் மனக்குழப்பமும் அதிக செலவினங்களும் உண்டுபண்ணும். உத்தியோகத்தில் மேல் பதவிகளும் நஷ்டமான பொருள்கள் சிலபாகம் எதிர்பாராமலே வந்துசேரும் ராசாங்க பத்திரமும் மேலோர் பெரியோர்களின் ஆசியும் உண்டுபண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

குறிப்பு :- பெரியோர்களுக்கும் மகாஜனங்களுக்கும் தெரிவித்துக்கொள்வதாவது சமீபத்தில் வந்த சந்திரகிரகணம் பூர்ணமானதாலும் ராஜாவே சந்திரனுக அமைந்து அவருக்கு கேது கிரஸ்தம் ஏற்பட்டதால் உலகிற்கு எதிர்காலம் ரொம்ப சிரமத்தைத்தரும். இயற்கைகளெல்லாம் மாறி மாறி சரியாய் நடவாமல் மாறி நடக்கும். தர்ம தேசங்கள் ரக்ஷிக்கப்படும். எங்கும் ஆஸ்திகர்கள் சஜ்ஜனங்கள் தெய்வ பலத்தைக் கைவிடாமலும் அவரவர்களின் கடமைகளை சரியாய் நடத்திக்கொண்டும் உலக க்ஷேமத்திற்காக தன்னல் முடியாவிட்டாலும் ஆங்காங்கு மகாஜனங்களைச் சேர்த்து ஆலயங்களிலும் நதிதீரங்களிலும் யக்யயாகங்களும் லக்ஷம் கோடி அர்ச்சனைகளும் செய்துவர உலகம் நன்மை அடையும். தக்ஷணபாரதம் தர்மத்தால் ரக்ஷிக்கப்படும். கடவுள் காப்பாராக.